விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பன்னிரண்டு + 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 19 ஞாயிற்றுக்கிழமை (05.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 351




## மனுஷ நாணயக்கார எம்.பி மீது
# ஆளும் கட்சியினர்
# தாக்குதல் முயற்சி

### சபையிலிருந்து எதிர்க்கட்சி வெளிநடப்பு
### சண்டியர்களிடமிருந்து பாதுகாக்குமாறு கோரிக்கை

*(கொழும்பு)* ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார மீது நேற்று சபையில் ஆளும் கட்சியினர் தாக்குதல் முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து சண்டியர்களிடமிருந்து தம்மைப் பாதுகாக்குமாறும் தமது பாதுகாப்பை உறுதிப் படுத்தும்வரை பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளப்போவதில்லை என எதிர்க்கட்சியினர் தெரிவித்து வெளிநடப்புச் செய்தனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா 21 பேர் பலி

(கொழும்பு) நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 11



சாவகச்சேரியில்
## கொரோனாவால் ஒருவர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியைச் சேர்ந்த 82 வயதான முதியவர் ஒருவர் நேற்று சனிக் கிழமை காலை கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி 11

## சர்வதேச ரீதியாக ஆபத்தானதாக ‘ஒமிக்ரோன்’ திரிபு காணப்படுகின்றது

### உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை



(ஜெனிவா)

வீரியமிக்க ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் திரிபு சர்வ தேச ரீதியாக ஆபத்தான வைரஸ் திரிபாகக் காணப்படும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி தென்னாபிரிக்காவில் முதலாவதாக ஒமிக்ரோன் வைரஸ் திரிபு அடையாளம் காணப்பட்டது.

இதுவரையில் சுமார் 40 நாடுகளில் இந்தத் திரிபு அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் 11

3 நிபந்தனைகளுடன்
## எரிவாயுவை சந்தைக்கு விநியோகிக்க தீர்மானம்

(கொழும்பு)

மூன்று அடிப்படை நிபந்தனைகளுக்கு உட்பட்டு இன்று முதல் உள்நாட்டு எரிவாயுவை மீண்டும் சந்தைக்கு வெளியிட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (CAA) அனுமதி வழங்கியுள்ளது.

முன்பு இறக்குமதி செய்யப்பட்ட சிலிண்டர்கள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும். 11

விபரீத முடிவெடுத்த
## வயோதிபர் உயிரிழப்பு
### கைதடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நித்திரைக் குறைவு காரணமாக விபரீத முடிவெடுத்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் கைதடி மேற்கைச் சேர்ந்த இராமன் 11

## யாழில் தடைப்பட்ட அபிவிருத்திகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும்

### யாழில் முன்னாள் அமைச்சர் சம்பிக்க

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தடைப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டுமென முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரி 11



## உரும்பிராயில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

### அமைதியின்மை ஏற்பட்டதையடுத்து பொலிஸார் துப்பாக்கிச் சூடு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் நேற்றைய தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் அமைதியின்மை 11

முல்லைத்தீவில்
## அடுத்தடுத்து வெடித்த காஸ் அடுப்புகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலும் அடுத்தடுத்து காஸ் அடுப்புகள் வெடிக்கும் சம்பவங்கள் பதிவாகி வருகிறது.

அதனடிப்படையில் புதுக்குடியிருப்பை தொடர்ந்து புளிய 11

## அடுத்த வாரம் இந்தியா செல்கிறது கூட்டமைப்பு

### மோடியை சந்திக்கவும் ஏற்பாடு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக் குழுவொன்று அடுத்த வாரம் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக இந்திய உயர்ஸ்தானிகரகம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் கடந்த தினம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலுவலகப் பாவனைக்கு வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அண்மையில் கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதிக்கு சமீபமான பகுதியில் அலுவலகப் பாவனைக்கு உகந்த மாடி வீடு வாடகைக்கு உண்டு.

**077 148 4540**
**077 295 1097** (8853)

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்க்காணும் வேலை ஆட்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (ஆண்/பெண்)
- காசாளர் (ஆண்/பெண்)
- சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
- சிட்டை எழுதுனர் (ஆண்/பெண்)

அனுபவத்திற்கேற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (8921)

**071 034 7308/021 221 6779**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## கடை வாடகைக்கு உண்டு

யாழ். நகரை அண்டிய பகுதியில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு (8900)
**077 131 0927**

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இயங்கும் வியாபார நிறுவனத்திற்கு கணனி அறிவுள்ள பெண் பணியாளர்கள் தேவை. (8927)

**077 907 3761/021 222 3146**

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- *கேக் ஐசிங்* - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- *உணவு தயாரித்தல்* - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- *கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.





- FACIALS (10 வகை), GALVANIC FACIAL, Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- BRIDAL DRESSINGS (C-3162)

*(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, சுவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.



**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

**சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்புதிய பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

மேலும் விபரங்களை காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8684)

**☎-070 640 5951**
e-mail : engchelvam@gmail.com

## விற்பனைப் பிரதிநிதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் **N FLASH SUPER DETERGENT** நிறுவனத்திற்கு

- கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றக்கூடிய தகுதிவாய்ந்த விற்பனைப் பிரதிநிதி தேவை.
- AD சாரதி அனுமதிப் பத்திரமுடைய சாரதி.
- யாழ். மாவட்டத்திற்கு கணனி அறிவுடைய அலுவலக உதவியாளரும் விநியோக உதவியாளரும் தேவை.

**சுயவிபரக் கோவைகளை 15.12.2021 இற்கு முன்னர் அனுப்ப வேண்டிய முகவரி:**

**N FLASH SUPER DETERGENT**
**இல.186/11, நெசவுசாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.** (C-3167)

## எரிபொருள் விலையில் மாற்றம் ஏற்படும்

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் எரிபொருள் விநியோக சேவையினை முன்னெடுக்கிறது.

எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளாவிடின் எரிபொருளுக்கான வரியை குறைக்குமாறு நிதியமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்தார்.

எதிர்வரும் நாட்களில் எரிபொருளின் விலையில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம். நட்டமடைந்த நிலையில் தொடர்ந்து சேவையை முன்னெடுத்து செல்வது கடினமாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.(ம-03)

# மரண அறிவித்தல்



### திருமதி
## பத்மாதேவி மயில்வாகனம்

**தோற்றம் : 1963.04.20 மறைவு : 2021.12.04**

நல்லூர் சங்கிலியன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாதேவி மயில்வாகனம் அவர்கள் நேற்று (04.12.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகைபாகன் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வியும் அல்லைப்பிட்டி 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லையா - பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மயில்வாகனம் (மயில் - தாரணி புடைவையகம், கிளிநொச்சி) அவர்களின் ஆருயிர் மனைவியும் கபில்ராஜ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தாரணி மற்றும் சதுர்சன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் இராஜேந்திரன், ரஞ்சினிதேவி, விமலாதேவி, காலஞ்சென்ற சண்முகானந்தன் மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சஜீபாவின் அன்பு மாமியும் சச்சிதானந்தம், சண்முகரத்தினம், காலஞ்சென்ற கருணாகரன், காலஞ்சென்ற இந்திரகுமார் மற்றும் நகுலேஸ்வரி, இராஜேஸ்வரி, மணிமாறன் (லண்டன்), கமலநாதன், ராகினி, செல்வராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் யோகேஸ்வரி, சுலோசனாதேவி, மகேந்திரம், மகேந்திரன், எலிசபத் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.12.2021) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில். நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கணவன் : 077 454 8899, மகன் (பிரான்ஸ்) : 0033768639100,**
**மகன் : 076 379 6775**

இல. 25 சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (8923)

தகவல் :-
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு வடக்கில் அதிகரிப்பு



## ஆயுதம் மூலமாகவேனும் இதை தடுத்து நிறுத்துங்கள்

(கொழும்பு)

**வடக்கு கிழக்கில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரிக்கிறது. எனவே எமது கடற்படைக்கு ஆயுதம் வழுங்கியேனும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும் என எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்கள் வடக்கின் கடல் வளங்களை அழிக்கின்றனர். வடக்கு கிழக்கில் அவர்களின் ஆக்கிரமிப்பு நிகழ்ந்த வண்ணமே உள்ளது.

நாகதீபம் பக்கம் சென்றால் இவற்றை எம்மால் அவதானிக்க முடியும். இந்த செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தியாக வேண்டும். அதற்கான அனுமதியை எமது கடற்படைக்கு வழங்க வேண்டும். இந்திய மீனவர்கள் எமது மீனவர்களை தாக்குவதுடன், மீன்பிடி உபகரணங்களை அழிக்கின்றனர். அந்த அசம்பாவிதங்களை நிறுத்த வேண்டும்.

நாம் சிறிய நாடு என்பதற்காக இந்தியா செய்வதையெல்லாம் எம்மால் அமைதியாக வேடிக்க பார்த்துக் கொண்டிருக்க முடியாது. பெரிய நாடுகளுக்கும் கடமைகள் உள்ளன.

சிறிய நாடாகிய எமது நாட்டை பெரிய நாடுகள் அடக்காது. அவர்களின் அதிகாரத்தை த்வறாக பயன்படுத்தாது இருக்க தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே எமது கடற்படைக்கு ஆயுதம் வழங்கியேனும் இந்த ஆக்கிரமிப்பை நிறுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# பாகிஸ்தான் சம்பவத்திற்கு ஜனாதிபதி, பிரதமர் கண்டனம்

(கொழும்பு)

பாகிஸ்தான்-சியல்கோட் பகுதியில் இலங்கையர் ஒருவர் சித்திரவதைக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனாதிபதியும் பிரதமரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் பதிவிட்டுள்ள ஜனாதிபதி, பாகிஸ்தானின் சியால்கோட்டில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக தாம் மிகுந்த கவலையடைவதாக தெரிவித்துள்ளார்.

பிரதமர் இம்ரான் கானும், அந்நாட்டு அரசாங்கமும் நீதி வழங்குவதுடன் எஞ்சியுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் என நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதே வேளை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சம்பந்தப்பட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான தனது உறுதிப்பாட்டைக் கடைப்பிடிப்பார் என நம்புவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த தீவிர வாத கும்பல் நடத்திய காட்டு மிராண்டித்தனமான மற்றும் கொடூரமான தாக்குதலைக் கண்டு இலங்கை அதிர்ச்சியடைகிறது என்றும் பதிவிட்டுள்ளார்.(நி-5)

# மின் தடையின் போது மின் தூக்கியில் சிக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மின்டை காரணமாக பாராளுமன்ற .வளாகத்தில் உள்ள மின் தூக்கியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் சிக்கிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

துஷார இந்துனில் மற்றும் லலித் எல்லாவல ஆகிய இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுமே இவ்வாறு15 நிமிடங்கள் சிக்கிக்கொண்டனர்.

2017 ஆம் ஆண்டும் இதே போன்ற ஒரு சம்பவம் இடம் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பாராளுமன்ற விவாதங்களை புறக்கணிக்க ஐ.ம.ச. தீர்மானம்

(கொழும்பு)

பாராளுமன்ற ஜனநாயகத்தை சண்டியர்களிடம் இருந்து பாதுகாத்து தரும் வரையில் பாராளுமன்ற விவாதங்களை புறக்கணிக்க ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். பாராளுமன்றத்தில் நேற்று மதியம் மனுஷ நாணயக்கார மற்றும் ராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஆகியோருக்கு இடையில் சூடான வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனுஷ நாணயக்காரவை தாக்க முயற்சித்தனர். அப்போது மனுஷ நாணயக்கார, சபாநாயகர் வெளியேறும் வழியாக சபையில் இருந்து வெளியேறியுள்ளார். இதன் பின்னர் உடனடியாக கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர்கள் குழு, சண்டியர்களிடம் இருந்து தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் வரை வரவு- செலவுத் திட்டம் மீதான விவாதத்தை புறக்கணிப்பது என தீர்மானித்துள்ளது. (நி-5)


## சேவை

எங்களிடம் அனுபவமுள்ள முதியோர் பராமரிப்பாளர்கள் மற்றும் வீட்டு வேலையாட்கள் உள்ளனர். (சி-1538)

074 055 5922

## தேவை

முதியோர் பராமரிப்பு,வீட்டு வேலை, கிளினிங் வேலைகளுக்கு நிரந்த ஆட்கள் தேவை. (சி-1539)

074 055 5922


# தகனசாலை, கைத்தொழில் பயன்பாடுகளுக்கு மட்டும் எரிவாயு

(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் மயான பயன்பாட்டிற்காக எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க இரண்டு எரிவாயு நிறுவனங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகிய வண்ண தெரிவித்தார்.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்களுக்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வீட்டுப் பாவனைக்காக சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# வெடி மருந்துடன் விமான நிலையத்தில் ஒருவர் கைது

(கொழும்பு)

பொட்டாசியம் - பெர்குளோரைட்டு எனப்படும் 25 கிலோ வெடி மருந்துடன் கட்டு நாயக்க விமான நிலையத்திற்குள் நுழைய முற்பட்ட வாகன சாரதியொருவர் விமான நிலைய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 65 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கைப்பற்றப்பட்ட வெடி மருந்துடன் கட்டு நாயக்க விமான நிலைய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அதற்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (நி-5)


## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, $A_1$ UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK $A_1$ Exam.
- Exam Registration center.

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

OXFORD ENGLISH ACADEMY,
Ariyakulam junction, Jaffna. (8667)

TP : 077 780 3970, 074 007 1970


### ஆபிரிக்காவின்

# கொடிய விஷப் பாம்பு தெஹிவளைப் பூங்காவில்



(கொழும்பு)

கொரோனாத் தொற்று நோய் காரணமாக மூடப்பட்டிருந்த தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்கா பொதுமக் களின் பார்வைக்காக திறக்கப்ப ட்டுள்ளது. அத்துடன் புதிய ஊர்வன சில பொது மக்களின் பார்வைக்காக காட்சிக்கு வைக் கப்பட்டுள்ளன.

இவற்றில் ஆபிரிக்காவை தாய்மாக கொண்ட கொடிய விஷத்தை விசிறி அடிக்கும் நாகமும் அடங்கும். 15 முதல் 20 ஆண்டுகள் உயிர் வாழக் கூடிய இந்த நாகம் சுமார் 5 அடி நீளத்திற்கு வளரக்கூடியது.

இந்த் நாகம் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். தனக்கு ஆபத்து நேரும் நேரங்களில் உடனடியாக தலையை உய ர்த்தி படமெடுக்கும் இந்த பாம்பு 8 முதல் 10 அடிதூரத்தில் இருக்கும் எதிரியின் கண்ணை நோக்கி விஷத்தை விசிறி அடிக்கும் வல்லமை கொண்டது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி இறுதிக்குள் யாழ்., மன்னார் அணிகள்


யாழ்.அணி


கிளிநொச்சி அணி

மாவட்ட அணிகளுக்கிடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் யாழ். மாவட்ட அணி இறுதியாட்டத் திற்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்று சனிக்கிழமை மன்னார் உள்ளக விளையாடரங்கில் நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது.

நான்கு கால்பகுதி ஆட்டங்களாக நடைபெற்ற ஆட்டத்தில் முதல் கால் பகுதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இதனால் 10:08 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ். மாவட்ட அணி முன்னிலையில் வகித்தது.

அடுத்த மூன்று கால் பகுதி ஆட்டங்களில் ஆதிக்கம் செலுத்திய யாழ்.மாவட்ட அணி 44:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளது. மற்றுமொரு அரையிறுதியில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதில் கிளிநொச்சி மாவட்ட அணியினரின் பந்துப்பரிமாற்றம் அனைவரையும் ஈர்த்துக் கொண்டது.

இருப்பினும் மன்னார் மாவட்ட அணி அனுபவம் நிறைந்த விளையாட்டால் 37:28 என்ற புள்ளிகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது.(4,90)

## வான்கடே டெஸ்ட் 10 விக்கெட்டுக்களையும் சாய்த்த அஜாஸ் பட்டேல்

நியூசிலாந்து வீரர் அஜாஸ் பட்டேல் 47.5 ஓவர்கள் வீசி இந்திய அணியின் 10 விக்கெட்களையும் கைப்பற்றி புதிய சாதனை படைத்தார்.

இந்தியா- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது டெஸ்ட் வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்திய அணி கப்டன் விராட் கோலி டாஸ் வென்று பட்டிங் தேர்வு செய்தார்.

புஜாரா, கப்டன் விராட் கோலி டக் அவுட்டில் வெளியேறிய நிலையில் இந்திய அணி 90 ரன்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. தொடக்க வீரர் மயங்க் அகர்வால் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். முதல் நாள் ஆட்ட முடிவில் இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 221 ரன்கள் அடித்தது. மயங்க் 120 ரன் களுடனும், சகா 25 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

இரண்டாவது நாளான நேற்றுக் காலை மேலும் 2 ரன்கள் சேர்த்திருந்த நிலை யில் சகா ஆட்டமிழந்தார். அடுத்து களம் இறங்கிய ரவிச்சந்திரன் அஸ்வின் ரன் எதுவும் எடுக்காமல் அஜாஸ் படேல் பந்துவீச்சிற்கு விக்கெட்டை பறிகொடுத்தார். பின்னர் வந்த அக்ஸர் படேல் மயங்க் அகர்வால் உடன் ஜோடி சேர்ந்து ரன் குவிப்பில் ஈடுபட்டார்.

அரைசதம் அடித்த அக்ஸர் மேலும் 2 ரன்களை சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். எனினும் தொடர்ந்து விளையாடிய மயங்க் அகர் வால் 150 ரன்களை குவித்த நிலையில் அஜாஸ் படேல் பந்துவீச்சில் விக்கெட்டை இழந்தார். மயங்க் அடித்த 150 ரன்களில் 17 பவுண்ட்ரிகள் மற்றும் 4 சிக்ஸர்களும் அடங்கும். பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ரன்களுடன் வெளியேற இந்திய அணி யின் முதல் இன்னிங்ஸ் 325 ரன்களுக்கு முடிவுக்கு வந்தது.

இந்தப் போட்டியில் மும்பையை பூர்வீகமாகக் கொண்ட நியூசிலாந்து வீரர் அஜாஸ் பட்டேல் 47.5 ஓவர்கள் வீசி இந்திய அணியின் 10 விக்கெட்களையும் கைப்பற்றி புதிய சாதனை படைத்தார். (4-6)


# மரண அறிவித்தல்



திருமதி

## அன்னம்மா பொன்னம்பலம்

பிறப்பு : 1934.10.12 இறப்பு : 2021.12.04

சாரையடி, மந்திகையைப் பிறப்பிடமாகவும் சேவில் ஒழுங்கை, தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா பொன்னம்பலம் அவர்கள் நேற்று (04.12.2021) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் பாசமிகு மனைவியும் திரு. பொ. சங்கரலிங்கம் (ஓய்வுநிலை பருத்தித்துறை நகரசபை ஊழியர்) மற்றும் காலஞ்சென்ற திரு. பொ. சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ச. மகேஸ்வரி அவர்களின் அன்பு மாமியாரும் திரு. ச. ஜனகன் (ஆசிரியர் - குடத்தனை), திரு. ச. மிதுஷன் (Structure Designer - Steel Detailing ) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (05.12.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தும்பளை கோரியடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

(8934)

தும்பளை 077 269 0113 077 582 8449

தகவல் :- குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம், இந்து இளைஞர் கழகம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை கீரிமலை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறும்.

குறித்த இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (4-5-18)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06
04
1942



மறைவு
28
11
2019

அமரர். திருமதி

## நகுலாம்பிகை ஜெகதீசன்

(திதி: துதியை -05.12.2021)

ஆண்டு இரண்டு கடந்தாலும் நீங்கள் எங்களை விட்டுச் செல்லவில்லை அம்மா!
கண்முன்னே வாழ்ந்த வாழ்க்கை கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும் அம்மா!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கிறீன் மெமோறியல் ஞாபகார்த்த
வைத்தியசாலை ஒழுங்கை, மானிப்பாய். (8872) குடும்பத்தினர்


# மரண அறிவித்தல்

## திருமதி. பத்மநாதன் சீதாலட்சுமி



உடுவில் தெற்கு மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் சீதாலட்சுமி அவர்கள் 03-12-2021 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா, சிதம்பரம் தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற உமா மகேஷ்வரன், ஜெயநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

பத்மநாதன் அவர்களின் அன்புத் துணைவியாரும், செந்தில்நாதன் (இங்கி லாந் து), லக்ஷனி (இல ங்கை), காலஞ்சென்ற செந்தில்குமரன், வாகீஸ்வரன் (அவுஸ்திரேலியா), லோஜினி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத்தாயாரும்,

பஞ்சாட்சரம், சேயோன், சர்மிளா, மேனகா ஆகியோரின் அன்பு மாமியாரும்,

துலக்ஷன், டனுஷன், தமிழினி, செந்தில்குமரன், யாழினி, இராவணன், லபிஷா, கார்த்தி, கபிசயன், அபிசனா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07-12-2021 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 9.00 மணியளவில் மானிப்பாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (8908)

உடுவில் தெற்கு,
மானிப்பாய். 077 846 1976 தகவல்:
குடும்பத்தினர்


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 17.11.2020 அன்று சிவபதமடைந்த

## அமரர். மாணிக்கம் வேலும் மயிலும்

(உரிமையாளர், ஈஸ்வரி அரிசி ஆலை- எள்ளங்குளம்)

(திதி: 05.12.2021)



மண்ணுலகில்
1936 – 08 – 10

விண்ணுலகில்
2020 – 11 – 17

உழைப்பால் உயர்ந்த உன்னத
தலைவனே!
அன்பால், பண்பால்
ஆற்றலால்
நல்வழிப்படுத்திய அப்பனே
ஆலமரமாய் எமை
வளர்த்த தந்தையே
சந்தோசமாய் வாழ
வழிவகுத்த
எம் தெய்வமே
எம்மை விட்டு நீ பிரிந்து
ஓராண்டு
சென்றாலும்
எம் உயிர் உள்ளவரை
உன் நினைவுகளுடன்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ஈஸ்வரி இல்லம்,
கரும்பியோடை,
சமரபாகு,
வல்வெட்டித்துறை. (C-3160)

என்றும் உன் நீங்கா நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் இதுவரை 52 எயிட்ஸ் தொற்றாளர்கள் பதிவு

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் 52 எயிட்ஸ் நோயாளர்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 10 பேர் உயிரிழந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 52 எயிட்ஸ் நோயாளர்களில் 10 பேர் உயிரிழந்துள்ள நிலையில் அவர்களில் 7 பேர் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். தற்போது யாழ். மாவட்டத்தில் 35 பேர் எிட்ஸ் நோய்க்கான சிகிச்சை பெற்று வருகின்றனர்.

16 பெண்களில் நான்கு பெண்கள் கர்ப்பிணியாக இருக்கும் போது எயிட்ஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கர்ப்பவதிகள் பிரசவத்துக்காக அனுமதிக்கப்படும் போது அவர்களுக்கான எயிட்ஸ் பரிசோதனை இடம்பெறுகிறது.

தாயிடமிருந்து குழந்தைக்கு எயிட்ஸ் தாக்கம் ஏற்படாவண்ணம் முற்கூட்டியே அறிவதற்காக குறித்த பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5-18)

# இந்திய படகுகள் அத்துமீறல்; யாழிலும் கையெழுத்து வேட்டை



(யாழ்ப்பாணம்)


இந்திய இழுவைமடி மீன்பிடித் தொழிலுக்கு எதிரான சட்டங்களை நடைமுறைப்படுத்தி நிலையான மீன்பிடித் தொழிலை உறுதிப்படுத்தக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் வட மாகாண கடற்றொழிலாளர் இணையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்நடவடிக்கை நேற்று யாழ். நகரப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

மக்களிடம் பெற்றுக் கொள்ளப்படும் கையெழுத்துகளுடனான மகஜர் ஜனாதிபதி, சட்டமா அதிபர் மற்றும் கடற்றொழில் அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை இடம்பெற்ற நிலையில் யாழ்.நகரப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-5-33-18)

# பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

வடக்கிற்கு வருகைதந்த முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தின் பேருந்து நிலையம் பகுதிக்கு விஜயம் செய்த அவர் அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடியதுடன் 43 படை யணியின் துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினார்.

ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து விலகிய பின்னர் சம்பிக்க ரணவக்க புத்திஜீவிகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கிய அமைப்பே 43 படையணி ஆகும்.

அத்துடன் தான் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் மேற்கொண்ட அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்ததுடன் நெடுந்தூர பேருந்து நிலையம், யாழ்ப்பாண மாநகர சபை புதிய கட்டடம் போன்றவற்றைப் பார்வையிட்டு தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார். (4-5-33)

# உள்ளம் சஞ்சிகை வெளியிடு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் வெளியீடாக 'உள்ளம் சஞ்சிகை' இன்று 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு முதல் காலாண்டு சஞ்சிகையாக மின்னிதழ் ஆக வெளியிடப்படவுள்ளது. இச் சஞ்சிகையின் மெய்நிகர் வெளியீடானது Zoom செயலியினூடாக நடைபெறும்.

இதில் கலந்து கொள்வதற்கான Zoom இல. 8418809 1242 ஆகும். (கடவுச்சொல் தேவையில்லை). (4-5)

# அஞ்சலி நிகழ்வு

(குப்பிழான்)

மறைந்த எழுத்தாளர் இணுவையூர் கே.எஸ். ஆனந்தனுக்கான அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் இணுவில் அறிவாலயத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவரும், இணுவில் வேரும் விழுதும் அமைப்பின் அமைப்பாளருமான பேராசிரியர் வ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த நிகழ்வில் சிவ பூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன், இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன், ஆசிரியர் ந.தவசோதிநாதன், கவிஞர் வீரா ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்தவுள்ளனர். (4-5-18)




" புத்திகெட்ட மனிதர் எல்லாம்" என்கின்ற முழு நீளத் திரைப்படத்தின் முன்னோட்டம் நேற்று முன்தினம் யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் படக்குழுவினரால் வெளியிடப்பட்டது. இத்திரைப்படம் எதிர்வரும் 24 ஆம் திகதி யாழ்ப்பாண திரையரங்குகளில் வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்,சிவசாந்தன்)

# கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி தெற்கு பகுதியில் 4 லீற்றர் கசிப்புடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த இடத்திற்கு விரைந்த பொலிஸார் ஒருவரைக் கசிப்புடன் கைது செய்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 420 | 400 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 170 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 500 |
| தக்காளி | 500 | 480 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 340 | 340 | 400 | 400 |
| கரட் | 250 | 340 | 400 | 400 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 320 | 280 | 250 | 300 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 210 | 160 | 200 | 240 |
| பெரிய வெங்காயம் | 200 | 140 | 140 | 160 |
| பாகற்காய் | 550 | 550 | 600 | 600 |
| வெண்டிக்காய் | 320 | 200 | 240 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 150 |
| பயற்றங்காய் | 550 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 320 | 400 | 400 |
| பீற்றூட் | 160 | 140 | 160 | 200 |
| கறிமிளகாய் | 550 | 500 | 800 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 700 | — | 800 |
| போஞ்சி | 350 | 320 | 360 | 350 |
| கத்தரிதம்புள்ள | 400 | 350 | 400 | 350 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | — | 120 |
| தேசிக்காய் | 300 | 350 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 60-80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | — | 480 | — | 400 |
| முள்ளங்கி | 160 | 140 | — | 280 |
| பொன்னாங்காணி | 50 | 80 | 60 | 50 |
| வல்லாரை | — | 250 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 140 | — | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுங்கள் – அமெரிக்க பிரதிநிதிகள் வலியுறுத்து



(வோஷிங்டன்)

இலங்கையில் அரசியல் தீர்வுக்கு அழுத்தம் கொடுக்குமாறு வலியுறுத்தி அமெரிக்க பிரதிநிதிகள் கிரிகோரி டபிள்யூ. மீக்ஸ் மற்றும் மைக்கல் மெக்கால் ஆகியோர் அமெரிக்க இராஜாங்க செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

கணிசமான மற்றும் நீடித்த அரசியல் தீர்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் இலங்கையில் அதன் முயற்சிகளில் மீண்டும் கவனம் செலுத்துமாறு அவர்கள் அண்டனி பிளிங்கனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து ஏறக்குறைய 30 ஆண்டுகாலம் நிறைவடைந்துள்ள நிலையில் பிரிக்கப்படாத இலங்கையில் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு உட்பட அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களுக்கான அவசியம் குறித்தும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆகவே அத்தகைய தீர்வுகளைக் காண தமிழ் மற்றும் முஸ்லிம்கள் உட்பட எதிர்க்கட்சிகளுடன் இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாட்டை வலியுறுத்துமாறும்,

இலங்கை மக்களின் கோரிக்கையை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளையில், இந்த முயற்சியை ஆதரிக்கவும் அதற்கான வசதியை ஏற்படுத்தி கொடுக்கவும் அமெரிக்கா தயாராக உள்ளது என்பதை திணைக்களம் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இறுதியில், எடுக்கப்படும் எந்தவொரு முடிவும் தமிழ் , முஸ்லிம் மக்கள் உட்பட இலங்கை பிரஜைகள் அனைவரினதும் தேவைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் இருக்க வேண்டிய அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (நி-5)


**SHANTHIHAM**
Association for Health & Counselling

கிளிநொச்சி - முல்லைத்தீவு மாவட்டங்களில் சாந்திகம் நிறுவனத்தினால் UNICEF நிதியனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட உள்ள Expanded Support for Durable Resettlement and Reintegration எனும் திட்டத்தில் கீழ்வரும் பதவி நிலைகளிற்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகுதியுள்ளோர் தங்களின் சுயவிபரக்கோவையுடன் 2021-12-10 திகதிக்கு முன்னதாக கீழே தரப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்

**பதவி வெற்றிடங்கள்**

**உளவளத்துணையாளர் (Counsellors) - 3 (ஆண்/பெண்)**
உளவளத்துணை டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் மற்றும் 5 வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**கள உள சமூக அலுவலர் (Field Psychosocial workers) - 4**
உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். மற்றும் 5 வருடத்திற்கு குறையாமல் கள உள சமூக அலுவலர் வேலையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும

**நிர்வாக மற்றும் நிதி அலுவலகர் (Admin and Finance officer) - 1**
உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் 3 வருடத்திற்கு குறையாமல் குறித்த துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் (Program Cordinator) - 1**
குறித்த துறையில் பல்கலைக்கழக மானியங்களால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் 5 வருடத்திற்கு குறையாமல் குறித்த துறையில் அனுபவம்

**நிகழ்ச்சித்திட்ட நிபுணர் (சிறுவர்கள்)**
**(Program Specialist for Children's Program) -1**
குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து டிப்ளோமா ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் மற்றும் 5 வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**நிகழ்ச்சித்திட்ட நிபுணர் (பெற்றோர்கள்)**
**(Program Specialist for Parent's program) - 1**
குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து டிப்ளோமா ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் மற்றும் 5 வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர்-சமூக சேவை பணியாளர்களை வலுப்படுத்தல்**
**Program Coordinator - Strengthening Social Service Workforce 1**
குறித்த துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து டிப்ளோமா ஒன்றினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் மற்றும் 5 வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**கண்காணிப்பும் மீளாய்வும் உத்தியோகத்தர் (M&E Officer) - 1**
உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் இத் துறையில் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் 5 வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**தங்குமிட அலுவலக உதவியாளர் (Living Caretaker) - 1**
குறித்த பிரதேசத்திற்குரிய பிரஜையாகவும், குறித்த வேலைத்தளத்தில் தங்கி வேலையாற்றக் கூடியவராக இருத்தல் வேண்டும். மற்றும் 3 வருடத்திற்கு குறையாமல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்

**சாரதி (Driver) - 1**
செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும் மற்றும் குறிந்த துறையில் குறைந்தது 5 வருட கால அனுபவம் இருத்தல் வேண்டும்

பொது நிபந்தனைகள்
- வயதெல்லை 55
- காலப்பகுதி - 08 மாத காலம் (ஒப்பந்த அடிப்படை)

No.8,8/1, Katpahavinayakar Lane,
Off Kachcheri Nallur Road,
Jaffna.
021-222-3338
Email To: hr.shanthiham@gmail.com
(சி-3157)


## கூட்டுறவுக்கு இலக்கணம் வகுத்து வாழ்வை மக்கள் சேவைக்கு அர்ப்பணித்த பெரியார்



மனித வாழ்வின் மேம்பாட்டுக்காக உழைத்த உத்தமர்களில் பெரியார் வீரசிங்கமும் ஒருவர்.

அவர் ஆற்றிய சமூகப் பணிகளில் குறிப்பாக கூட்டுறவுப் பணியை இங்கு குறிப்பிடலாம். சிறந்த தலைமைத்துவம் ஒன்றினால் கூட்டுறவைச் சிறப்பாக, வழி நடத்த முடியும் என்பதை செயலில் காட்டியவர்.

இவரது தலைமைத்துவத்தின் கீழ் உருவான கூட்டுறவு நிறுவனங்களாக மலையாளம் புகை யிலை கூட்டுறவுச்சங்கம்.யாழ் மாவட்ட கூட்டுறவு வங்கி. வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை போன்ற அமைப்புக்களைக் குறிப்பிடலாம். அத்துடன் கூட்டுறவுக் கல்விக்கென கூட்டுறவுக் கல்லூரியை அமைத்ததோடு கூட்டுறவுக் கல்லூரியின் வளர்ச்சிக்காக"ஐக்கிய தீபம்"தமிழ் பத்திரிகை" கூட்டுறவாளர்"என்னும் ஆங்கிலப்பத்திரிகைகளை வெளியிடஅயராது உழைத்தார்.

வடபகுதியுடன் கிழக்கு மாகாண கூட்டுறவாளர்களையும் இணைத்து கூட்டுறவுத் துறைக்கு பணியாற்றி தேசிய மட்ட த்துக்குவிரிவுபடுத்தினார். 1955 இல் அமைக்கப்பட்ட இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தோற்ற த்திற்கு அயராது உழைத்ததோடு பேரினவாத உள்ளங்களை வென்றமையால் தமிழனாக இருந்தும் கூட்டுறவுச் சம்மேளனத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் ஆராய்வதற்கும். தீர்வு கண்டு கொள்வதற்கும் ஆண்டு தோறும் கூட்டுறவாளர் மாநாடுகளைக் கூட்டினார். எந்தப் பிரச்சினைகளையும் எவர் முன்னிலையிலும் எவ்விடத்திலும் எதுவித தயக்கமுமின்றி எடுத்துக் கூறவும் சரியானதும் நியாயமானதும் எனக் காணப்படும் விடயங்களைக் கண்டு கொள்ளவும், அதனை செயல்படுத்தவும் துணிவுடன் செயலாற்றினார்.

பெரியார் வீரசிங்கம் பணித்திறன் வடபகுதியை விடதென்னிலங்கை கூட்டுறவாளர்களை மிகவும் கூடுதலாக கவர்ந்தது எனலாம். இன்றும் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும கூட்டு றவாளர்களை மதிப்பளித்து வரவேற்கின்றனர்.

கூட்டுறவு வளர்ச்சிக்கு கூட்டு றவுக் கல்வி வளர்ச்சி மிக அத்தியாவசியமானது என்பதில் கவனம் செலுத்தி யாழ்ப்பாண கூட்டுறவுக் கல்லூரியை அமைத்தார். இவரது தலைமைத்துவ த்தினால் சிறப்பாக செயலாற்றி வந்த கூட்டுறவுக் கல்லூரியானது லெயிட்டோ ஆணைக்குழுவின் கவனத்தை கூட ஈர்த்தது. லெயி ட்டோ ஆணைக் குழுவானது இலங்கையில் புனரமைப்பு செய்ய வேண்டும் என சிபார்சு செய்த மூன்று கூட்டுறவுக் கல்லூரிகளில் ஒன்றாக யாழ்ப்பாணக் கல்லூரியையும் சிபார்சு செய்தது. கூட்டுறவுப் பரிசோதகர்களை எடுத்து பயிற்சியளித்து செயற்படுத்திய பெருமையும் இவரையே சாரும். இதே போன்று யாழ் மாவட்டம் ஒரு விவசாய பிரதேசம் என்பதால் விவசாய உற்பத்தி சமாசத்தை உருவாக்கி விவசாயிகளின் உற்பத்திக்கு ஊக்கம் அளித்து விளைபொருட்களை சந்தைப்படுத்தல். உள்ளீடுகளை பெற்றுக்கொடுத்தல் போன்றவற்றை சிறப்பாக மேற் கொண்டு இப் பிரதேச பொருளாதார அபிவிருத்திக்கு பணியாற்றினார்.

வடபகுதி கூட்டுறவு இயக்கத்துக்குக்கென தனித்தும் ஒன்றை நிலைநாட்டி. கூட்டுறவாளருக்கு முன்னுதாரணமாக. கூட்டுறவுத் தலைமைத்து வத்திற்கு இலக்கணமாக வாழ்ந்த பெரியாரின் வாழ்க்கையில் இருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள் அநேகம் உண்டு. அவர் காட்டிய கூட்டுறவு தலைமைத்துவத்தைப் பின்பற்றி கூட்டுறவு இயக்கத்தை முன்னெடுப்போம்.

**தர்மராஜா ரமேஸ்குமார்**
**பதில் செயலாளர்,**
**கல்விப் பயிற்சியளிப்பு உத்தியோகத்தர்,**
**யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை**


**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984ஆம் ஆண்டு பிறந்த, சுய தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை (8910)

T.P: 071 330 1133

**மணமகள் தேவை**

யாழ் Christian 1987 CIMA, ACCA (Fully Qualified) Accountant மண்மகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க் கின்றனர். (R.C சமயத்தை சேர்ந்தவரும் விரும்பத்தக்கது) (8856)

T.P: 076 106 4481

**மணமகள் தேவை**

| | |
|---|---|
| பிறப்பு | - 1985- யாழ்.இந்து கௌரவ குடும்பம் |
| நட்சத்திரம் -லக்- | சூரியன்- செவ்வாய் மூலம் 3ஆம் பாதம் |
| கி.பா | -38 1/2 உயரம்-5 '5 |
| தகைமை | -Busi.Mgt (UK) |
| தொழில் | - Moto (Spanes கடை உரிமையாளர் Stanley road, Jaffna) |
| எதிர்பார்ப்பு | - சாதாரண படித்த பெண் |

(8885)

தொ.இல- 077 284 2943

**வேலைக்கு ஆட்கள் தேவை**

மீசாலை A9 வீதியில் இயங்கி வரும் பான்சி கடை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். (C-3156)

தொடர்பு:
077 5900 777
076 9848 979


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

05.12.2021
கார்த்திகை 19, ஞாயிற்றுக்கிழமை
பிரதமை முற்பகல் 11.44 மணிவரை
கேட்டை முற்பகல் 10.12 மணிவரை
சுபநேரம் 9.16-10.46 மணிவரை
இராகுகாலம் 4.46-6.16 மணிவரை
சந்திராஷ்டமம்: கார்த்திகை

வளவன்


மேஷம்

அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

சுற்றத்தாரை அனுசரித்து செல்வது நல்லது, பயணங்களால் அலைச்சல்களும் மனச்சோர்வுகளும் ஏற்படலாம், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.


மிதுனம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


கடகம்

பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.


சிம்மம்

பிள்ளைகளின் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, பிரபலமானவர்களின் சந்திப்புண்டு.


கன்னி

வழிபாட்டில் நம்பிக்கை கூடும் நாள், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.


துலாம்

எதிர்பார்த்த உதவிகள் உறவினர் வழியில் கிடைக்கும் வாய்ப்புண்டு, உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


விருச்சிகம்

வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், அனைத்திலும் வெற்றி பெற கண்ணனை வழிபட வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

சோம்பலை விலக்குவது நல்லது, குடும்பத்தினர்களை அனுசரித்து செல்வது நல்லது, சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


மகரம்

குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சுப விரயங்கள் கூடும் நாள்.


கும்பம்

எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்

மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

உன் இன்பமும் துன்பமும் உனது கையில் இருக்கிறது

# வடக்கில் கரை ஒதுங்கும் சடலங்கள்; பொறுப்புக் கூறுவது யார்? - சிறீதரன் எம்.பி.

(கொழும்பு)

வடக்கின் கடற்கரையோரங்களில் கரையொதுங்கியுள்ள 6 சடலங்களுக்குரிய ஆண்கள் யார்? என்பதனை பொலிஸாரால் இதுவரையில் ஏன் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை? இவ்வாறு சடலங்கள் கரையொதுங்குவதற்கு பொறுப்புக்கூறுவது யார்? என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சபையில் கேள்வி எழுப்பினார்.



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இன்டர்போல் முதல் உலகம் வரை பிரபலமாகி பேசப்படுகின்ற இலங்கை பொலிஸாரால் ஏன் இன்னும் இந்த உடல்களுக்குரியவர்கள் யார் என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை?

வடக்கு, கிழக்கு மக்களை குறிவைத்ததாகவே பெருமளவு நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியில் பல கட்டடங்கள் இலங்கையின் முப்படைகளினால் வடக்கில் அபகரிக்கப்பட்டுள்ள தமிழர்களுடைய தனியார் காணிகளில் கட்டுவதற்காக செலவிடப்படவுள்ளன.

கடந்த வாரம் கூட மாதகல், பருத்தித்துறை, வலிகாமம் வடக்கு போன்ற பிரதேசங்களில் மக்களின் காணிகளை அளக்கும் நடவடிக்கைகள் படையினர் நில அளவைத் திணைக்களம் மூலம் முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறான நிலங்களில் பாரிய கட்டடங்கள், விகாரைகள் அமைக்கப்படுகின்றன. இவை எல்லாம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தான் நடக்கின்றனவா? என அவர் கேள்வி எழுப்பினார். (நி-5)

# குழந்தை தொழிலாளர்களை கட்டுப்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஐ.நா. விசேட அறிக்கையாளர்

**(கொழும்பு)**

**இலங்கையில் சிறுவர்களை வேலைக்கமர்த்திய நடைமுறை அதிகமாகக் காணப்படுகிறது. அதனை கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் விசேட அறிக்கையாளர் ரொமோயா ஓபோகட்டா தெரிவித்தார்.**

இலங்கைக்கு விசேட சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவர் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் நிலை தொடர்ந்து காணப்படுகிறது. மிகவும் ஆபத்தான, கடின மான, அழுக்கு நிறைந்த பகுதிகளில் வேலை செய்கின்றனர். அத்துடன் பெண்களை பொறுத்தவரை பணியிடங்கள் பாரபட்சத்திற்கு உட்படுத்தும் நிலையும் காணப்படுகிறது.

தோட்டங்களில் வேலை செய்யும் பெண்களுக்கு அவர்களின் சக்திக்கு மேல் தொழில் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. லயன் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தமிழர்கள் என்ற அடிப்படையில் பாரபட்சத்திற்கு உள்ளாகும் நிலை காணப்படுகிறது. ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்யும் பெண்கள் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர்.

அத்துடன் நுண்கடன் சுமை காரணமாக பெரும்பாலான பெண்கள் வழிதவறிச் செல்லும் அபாய நிலை காணப்படுவதாகவும் அதனை தடுக்க அரசாங்கம் சட்டப் பொறிமுறைகளை கையாள வேண்டும் என்வும் ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# நாடு திரும்புபவர்களால் பாரிய ஆபத்து

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டுப் பயணங்களை முடித்துவிட்டு நாடு திரும்பும் பயணிகளை வழிநடத்துவதில் பாரிய பிரச்சினை உள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

நாட்டில் அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரோன் தொற்று உறுதியான பெண் குறித்து நேற்று வரை எந்தத் தகவலும் தமக்கு கிடைக்கவில்லை என அச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

குறித்த பெண்ணும் அவரது கணவரும் நவம்பர் 24 ஆம் திகதி நைஜீரியாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

இவர்களை தனிமைப்படுத்திய விடயம் உள்ளிட்டவை குறித்து இதுவரை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

இந்த சூழ்நிலையில் அவருடன் தொடர்பினை பேணியவர்கள் இதுவரை தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்படவில்லை என்றும் உபுல் ரோஹண தெரிவித்தார்.

தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத குறித்த பெண் எவ்வாறு வெளிநாடு சென்றார் என்பது கேள்விக்குறியாக உள்ளதாகவும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுகாதாரக் கண்காணிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக மிகுந்த கவலையளிப்பதாக அவர் தெரிவித்தார்.

எனவே நாட்டில் பாதிக்கப்பட்ட வேறு நபர்கள் இருக்க வாய்ப்புகள் அதிகம் என்பதனாலேயே கடந்த சில நாட்களாக தொடர்ந்து எச்சரிக்கை விடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதம் உறுதி கூறும், ஆனால் நிறைவேற்றாது. விஞ்ஞானம் உறுதி கூறாது. ஆனால் அதனை பயன்படுத்தும் அளவுக்கு நிறைவேற்றித் தரும்.
– நெடுஞ்செழியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பாகிஸ்தானில் நடந்த கொடூரம்

இஸ்லாமிய மார்க்கத்தின் இறை தூதர் நபிகள் நாயகம் அவர்களையும் இஸ்லாமியர்களின் புனித நூலான திருக்குரானையும் இழிவுபடுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், இலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் பாகிஸ்தானில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள தொழிற்சாலையொன்றில் முகாமைத்துவப் பணியாற்றும் இலங்கையைச் சேர்ந்த பிரியந்தகுமார என்ற நபர் இஸ்லாமியர்கள் முன்பாக, நபிகள் நாயகம் அவர்களைத் தூற்றுவதையும் குரானை இழிவுபடுத்துவதையும் தொடர்ச்சியாகச் செய்து வந்தார் என்றும் அதனால் ஆத்திரமடைந்த தொழிற்சாலையில் பணியாற்றும் இஸ்லாமியர்கள் அவரை அரைநிர்வாணமாக்கி, வீதியில் இழுத்து வந்து அடித்துக் கொலை செய்து எரியூட்டினர் என்று கூறப்படும் சம்பவம் சமூகவலைத்தளங்களில் வெளிவந்தபோது உலகம் முழுவதையும் பதற வைத்தது.

இப்படியொரு ஈனச் செயலைச் செய்யக் கூடியவர்கள் மனிதர்களா? என்பதுதான் உலக மக்களின் கேள்வியாகவுள்ளது.

நபிகள் நாயகத்தின் போதனைகள், புனித திருக்குரான் உபதேசிக்கும் அறக்கருத்துக்கள் இவற்றுக்கெல்லாம் மேலாக, ஐந்து நேரத் தொழுகை என இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுகின்றவர்கள் ஒரு மனிதனை அடித்துக் கொலை செய்து தீமூட்டி எரித்தனர் எனும்போது,

மதங்கள், சமயங்கள், மார்க்கங்கள் எதற்கானவை என்ற வினா மேலெழுகிறது.

பொதுவில் உலகிலுள்ள சமயங்கள் – மார்க்கங்களில் இஸ்லாமிய சகோதரர்கள் தங்கள் மார்க்கத்தை அதீதமாக நேசிப்பவர்கள். தங்கள் வாழ்வியலின் அத்தனை கூறுகளிலும் இஸ்லாமிய மார்க்கத்தை அணுஅணுவாகப் பின்பற்றுபவர்கள்.

அப்படியானால், இந்த உலகில் இரக்கமும் ஈகையும் மற்றவர்களை நேசிக்கின்ற உயர் மனிதநேயமும் இஸ்லாமிய சகோதரர்களிடமே விஞ்சியிருக்க வேண்டும்.

ஆனால், அதுதான் இல்லை என்பதை பாகிஸ்தானில் நடந்த மேற்போந்த சம்பவம் சுட்டி நிற்கிறது.

யார் எவராயினும் அவர்கள் அனைவரும் எல்லாச் சமயங்களையும் மதிக்க வேண்டும். பிற சமயத்தவர்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து தான் சார்ந்த சமயமே பெரிது என்றும் பிற சமயங்கள் கீழ்நிலைப்பட்டவை என்றும் யார் கருதினாலும் அது எல்லைமீறிய வெறித்தனம் என்பதில் மாற்றுக்கருத்திற்கிடமில்லை.

ஆனாலும் அவ்வாறானவர்களை நீதியின் முன் நிறுத்தி அவர்களுக்கு உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்கக்கூடியதான சட்ட ஏற்பாடுகள் அனைத்து நாடுகளிலும் உண்டு.

இவ்வாறு சட்ட ஏற்பாடுகள் இருக்கும் போது, மனித மனங்களைப் பதறவைக்கும் கொடும் செயலை யார் செய்தாலும் அது ஈனச் செயல் என்பதுதான் மக்கள் சமூகத்தின் தீர்ப்பு.

## வவுனியாவில் 3 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

### வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த கார்

(வவுனியா)

வவுனியாவில் மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் கார் ஒன்று வர்த்தக நிலையத்திற்குள் புகுந்ததால் வர்த்த நிலையத்திற்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இவ் விபத்து குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா நகரில் இருந்து ஹொரவப்பொத்தானை வீதி வழியாக சென்ற கார் ஒன்று ராணிமில் வீதியில் திரும்பிய போது பின்னால் வந்த பாரவூர்த்தி குறித்த காருடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்துக்குள்ளான கார் அப்பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றின் முன்னால் நின்ற மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதுடன், வர்த்தக நிலையத்திற்குள் புகுந்தது. இதன் காரணமாக கார் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன சேதமடைந்துள்ளதுடன், வர்த்தக நிலையத்தின் முன்பகுதியும் இடிந்து விழுந்து அதன் கூரைப் பகுதியும் சேதமடைந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், விபத்துக்குள்ளான வாகனங்களை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

(ம-3,250)

## குளத்தில் மீன் பிடிக்க சென்றவர் சடலமாக மீட்பு

### வவு. ஈரப்பெரியகுளத்தில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் நேற்று பிற்பகல் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தனது வீட்டில் இருந்து வவுனியா, ஈரப்பெரியகுளத்திற்கு மீன் பிடிப்பதற்காக சென்றவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த குளத்தில் மீன் பிடிப்பதற்காக காலையில் இருவர் சென்றதாகவும் திடீரென அங்கு மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது ஒருவர் தனக்கு இயலாமல் இருக்கின்றது எனக் கூறி குளத்தில் இருந்து வெளியேறி வீட்டுக்கு செல்வதாக கூறிச் சென்றுள்ளார்.

மற்றைய நபர் மீன் பிடித்து முடிந்ததும் வீடு நோக்கிச் சென்றபோது குளத்தின் அருகாமையில் இருந்த ஒழுங்கை ஒன்றில், இயலாது இருப்பதாக கூறிவிட்டு சென்ற நபர் மரணித்த நிலையில் காணப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச் சம்பவத்தில் வவுனியா, கல்நாட்டினகுளம், மதுரா நகர் பகுதியை சேர்ந்த 61 வயதுடைய செல்வராசா ஜெயகுலராசா என்பரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து ஈரப்பெரியகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-3,299)

## திருகோணமலையில் நீராடிய இரு மாணவர்கள் கடலில் மூழ்கிப் பலி

(திருகோணமலை)

திருகோணமலை, ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவில் உள்ள வாழைத்தோட்டம் கடலில் நீராடிக் கொண்டிருந்த இரண்டு மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வாழைத்தோட்டம் கடலில் நான்கு சிறுவர்கள் குளித்துக் கொண்டிருந்த நிலையில், இதில் இரண்டு சிறுவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டு மூழ்கியுள்ளனர்.

தரம் 9 இல் கல்வி கற்கும் 14 வயதுடைய யோகேந்திரராசா லக்சன், தரம் 6 இல் கல்வி கற்கும் 12 வயதுடைய டினேஸ்காந்த் நிம்ரோசன் ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

(ம-3)

## கைலாச பிள்ளையார் கோவிலடியில் கத்தி முனையில் கொள்ளையிட வந்தவர் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியில் உள்ள கடை ஒன்றில் கத்தி முனையில் கொள்ளையிட வந்த இளைஞர் ஒருவர் அங்கிருந்தவர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கடைக்குள் புகுந்த குறித்த இளைஞன் தனது பையில் மறைத்து வைத்திருந்த கத்தியை காண்பித்து பணம் கேட்டுள்ளார்.

அதன்போது அங்கிருந்தவர்கள் இளைஞனை மடக்கிப் பிடித்து கத்தியையும் பறிமுதல் செய்த பின்னர், இளைஞனை தடுத்து வைத்திருந்து பொலிஸாருக்கு அறிவித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை குறித்த இளைஞன் முன்னதாக நேற்றைய தினம் காலை, அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகில் உள்ள புத்தக கடைக்குள் புகுந்து அங்கிருந்த பெண்ணிடம் கத்தியை காட்டி பணம் கேட்டு மிரட்டியுள்ளார். அதனை அடுத்து பெண் கூக்குரல் எழுப்ப அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

அதன் பின்னரே கடைக்குள் புகுந்தும் கத்தியை காட்டி மிரட்டி பணம் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-3.33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 06 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர் குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

(நி)

## இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ “தந்தையே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும். ஆனாலும், என் விருப்பப்படி அல்ல.உம் விருப்பப்படியே நிகழட்டும்”

❖ சோதனைக்கு உட்படாதிருக்க விழித்திருந்து இறைவனிடம் வேண்டுங்கள்

❖ நீங்கள் எனக்காக அழவேண்டாம் மாறாக உங்களுக்காகவும் உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள். ஏனெனில் இதோ, ஒரு காலம் வரும். அப்போது 'மலடிகள் பேறுபெற்றோர்'

❖ “தந்தையே. இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை”

❖ “உங்களுக்கு அமைதி உரித்தாகுக!”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுப்படுத்தப்பட்ட கடைத்தொகுதிகளுடன் பண்டிகைக் கால வியாபார நடவடிக்கைகள்

## மன்னார் நகர முதல்வர்

(மன்னார்)

மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான கடைத் தொகுதிகளுடன் கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார். நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 2 வருடங்களாக கொரோனாத் தொற்று காரணமாக மன்னார் நகர சபையினால் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் குறித்த காலப்பகுதியில் மக்களின் நடமாட்டம் அதிக



ரித்துக் காணப்பட்டது.

இதனால் கொரோனாத் தொற்று அதிகரிக்கும் சந்தர்ப்பம் இருந்தது. குறித்த விடயங்களை அவதானித்த நிலையில் இவ்வருடம் பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கடைத் தொகுதிகளை வழங்குவதன் ஊடாக மக்களின் நெரிசலை கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்த்துள்ளோம்.

வியாபார நடவடிக்கைகளுக்கு வருகின்ற வெளிமாவட்ட வியாபாரிகள் அனைவருக்கும் கொரோனாத் தடுப்பூசிகள் இரண்டும் பெற்றுக் கொண்டுள்ளதுடன் தடுப்பூசி அட்டை வைத்திருத்தல் வேண்டும். குறித்த வியாபாரிகளுக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காத வர்த்தகர்களுக்கு எதிராக உடனடியாக பொலிஸார் மற்றும் சுகாதார துறையினர் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை பண்டிகைக்கால வியாபார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (4-5-285)

# மாணவர்களுக்கான சேவையை நடத்த தனியார் பேருந்து சங்கம் இணக்கம்

## முல்லை.மேலதிக அரச அதிபர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மாணவர்களுக்கான போக்குவரத்து சேவையை மேற்கொள்ள தனியார் பேருந்து சங்கம் இணக்கப்பாடு தெரிவித்துள்ளதாக முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. கடந்த 26 ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் போக்குவரத்து துறையினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு மாணவர்களுக்கான சேவையை காலையில் மேற்கொள்ளும் தனியார் பேருந்து சேவை பாடசாலை முடிந்தவுடன் இடம்பெறுவதில்லை என்பது தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அதற்கமைய மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் வீடு திரும்பக் கூடிய வகையில் தனியார் பேருந்து சேவை நடத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. (4-350)

# சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் செயலமர்வு

(தருமபுரம்)

புவி சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் ஏற்பாட்டில் சட்டவிரோத கனிய வளங்கள் அகழ்வுகளை கட்டுப்படுத்தல் தொடர்பாகவும் சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் இராணுவத்தினருக்கான செயலமர்வு நேற்று முன்தினம் இரணைமடு நெலும்பியசவில் நடைபெற்றது.

குறித்த செயலமர்வில் புவி சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் டி.சஜ்ஜா டி சில்வா உள்ளிட்ட பணியகத்தின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குறித்த செயலமர்வை தொடர்ந்து இரணைமடுக்குளத்தின் நீரேந்து பிரதேசத்தின் கனகராயன் ஆற்றில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறும் இடத்தை பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டவர்கள் பார்வையிட்டனர்.

கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் ச.செந்தில்குமார் சட்டவிரோத மணல் அகழ்வினால் இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டின் பாதிப்பு தொடர்பாக தெளிவுபடுத்தினார். (4-5-316)

# குடும்பஸ்தர் மீது தாக்குதல்

## நால்வர் கைது

(பனிக்கன்குளம்)

மல்லாவி அனிஞ்சியன்குளம் பகுதியில் உள்ள வீடொன்றின் உரிமையாளரை தாக்கிய குற்றச்சாட்டில் மல்லாவி பகுதியைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் மல்லாவி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். குறித்த நால்வரும் மது போதையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மல்லாவிபொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-281)

# 15 வருடங்களாக தேடப்பட்டவர் கைது


(கரணவாய்)

15 வருடங்களுக்கு முன்னர் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த நபரொருவர் நேற்று முன்தினம் வல்லைப் பகுதியில் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மானிப்பாயைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே இவ்வாறு பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

2005 ஆம் ஆண்டு கரணவாய் மகா வித்தியாலயத்தில் இரவு நேர காவலாளியை கட்டி வைத்து விட்டு குறித்த நபர் இலத்திரனியல் பொருட்களைத் திருடியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்ட நிலையிலே குறித்த நபர் கைது செய்யப்பட்டு வழக்கை எதிர் பெற்றது. (4-5-60)



முல்லைத்தீவு மத்திய பேருந்து நிலையத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம் : தவசீலன், கிருஷ்ணகுமார்)

## வீதி சீரின்மை

# யாழ்.-அக்கராயன் பேருந்து சேவை மூன்று மாதங்களாக நிறுத்தம்

(அக்கராயன்)

முக்கொம்பனுக்கு பேருந்து சேவையினை ஒழுங்கு செய்தது போல் வீதியினை புனரமைத்து அக்கராயனுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான பேருந்து சேவையினை நடத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அக்கராயன், கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான மூன்று கிலோமீற்றர் வரையான வீதி சேதமடைந்த நிலையில் நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு வருகை தருகின்ற மாணவர்கள், ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

முக்கொம்பன் மகா வித்தியாலய ஆசிரியர்களின் போக்குவரத்து நெருக்கடியினை தாங்கள் தீர்த்து வைத்தது போல் மூன்று கிலோ மீற்றர் வீதியினை புனரமைப்பதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கான பேருந்து சேவை அக்கராயன் வழியாக மேற்கொள்வதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் என்ற வகையில் இதற்கான நடவடிக்கையினை அமைச்சர் எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-350)



கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரின் தலைமையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் அனுசரணையில் கிளிநொச்சி அக்கராயன் ஆரோக்கிய மாதா ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றது. (படம் : ஜோசப்நயன்)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் மனிதவள முகாமைத்துவம் (Human Resuorce Management) மற்றும் கணனி அடிப்படைக்கல்வி (Computer Literacy) ஆகிய குறுகிய கால கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்த யாவரும் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

இக் கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 24.12.2021 வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியுமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் கே.கந்தவேல் தெரிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவால்...

ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

## எரிவாயுவை...

சிலிண்டர்களில் எரிவாயு வாசனை தொடர்பான இரசாயனங்கள் கட்டாயம்.

ஒவ்வொரு 100 சிலிண்டர்களுக்கும் ஒரு சிலிண்டர் பரிசோதிக்கப்பட வேண்டும்.

ஆகிய மூன்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. (ம-3)

## 21 பேர்...

அதன்படி, நாட்டில் கோவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 14,440 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## ஆளும் கட்சி...

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவை, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு அருகில் வைத்து, நேற்றுப் பகல் தாக்க முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது அங்கிருந்த அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, தாக்குதலை முறியடித்ததாக எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மனுஷ நாணயக்கார, பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தொடர்பில் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே இந்த தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது படைக்கலசேவிதர் மற்றும் பாராளுமன்ற பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு சென்றனர்.

சம்பவம் தொடர்பில், சபாநாயகரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் இதனையடுத்தே வெளிநடப்புச் செய்ய எம்.பிக்கள் தீர்மானித்துள்ளதாகவும் கிரியெல்ல தெரிவித்தார்.

இதன்பின்னர் உடனடியாக கூடிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, சண்டியர்களிடம் இருந்து தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தை புறக்கணிப்பது என தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது. (ம-3)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## யாழில் தடைப்...

வித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் கொழும்பு, காலி போன்ற நகரங்களினைப் போல யாழ்ப்பாண நகரத்தினையும் அபிவிருத்தி செய்யும் முகமாக நல்லாட்சி அரசாங்கத்தினால் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பல மில்லியன் ரூபாய் செலவில் பல்வேறுபட்ட அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக தூர இடங்களுக்கான பேருந்து தரிப்பு நிலையம் யாழ்ப்பாண மாநகர சபைக்கான புதிய கட்டடத் தொகுதி மேலும் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் தற்போது அவ்வாறான திட்டங்களை தொடர்வதற்கான நிதி ஒதுக்கீடுகள் அனைத்தும் இந்த அரசினால் நிறுத்தப்பட்டுள்ளன. ஏன் அவ்வாறு செய்கின்றார்களென தெரியவில்லை. அரசியல் பழிவாங்கலுக்காகவே இவ்வாறு செய்கின்றார்கள் என நினைக்கின்றேன். ராஜபக்ஷாக்கள் தமது பெயர் குறிப்பிடப்படும் அபிவிருத்தி திட்டங்களை மாத்திரமே செயற்படுத்துவார்கள். மக்கள் நலன் சார்ந்து செய்யப்பட மாட்டார்கள் என்பதே உண்மை.

நான் யாழ்ப்பாணத்திலிருந்து இந்த அரசாங்கத்திற்கு ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். தடைப்பட்டுள்ள அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கி மக்கள் சார்ந்த திட்டங்களை முன்னெடுங்கள் என்றார். (ம-3)

## சர்வதேச ரீதியாக...

வைரஸ் திரிபு தொடர்பில் பதற்றமடையாமல் அதற்கு முகங்கொடுப்பதற்கு தயாராக வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும் அதற்காக புதிய தடுப்பூசி தேவைப்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## உரும்பிராயில்...

ஏற்பட்டதை அடுத்து பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மானிப்பாய் - கைதடி வீதியில், உரும்பிராய் பகுதியில் நேற்றைய தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற ஹயஸ் மற்றும் துவிச்சக்கரவண்டி விபத்தில், துவிச்சக்கர வண்டியில் பயணித்த, உரும்பிராய் அன்னாங்கை பகுதியைச் சேர்ந்த குணசிங்கம் சுதன் (வயது-45) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து அங்கு கூடியோர் மல்லாகத்தை சேர்ந்த ஹயஸ் சாரதியை பிடித்து நையப்புடைத்துள்ளனர். அதனால் அப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

இது தொடர்பில் அறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றபோது பெருமளவானோர் அங்கு கூடி அமைதியின்மையை ஏற்படுத்தி இருந்தனர். அதனால் பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்ததுடன் வாகன சாரதியையும் கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,18,33)

## வயோ...

காளிமுத்தன் (வயது-65) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த வயோதிபர் கடந்த 2ஆம் திகதி இரவு நித்திரையின்மை காரணமாக களைநாசினியை பருகி விட்டு நித்திரை கொண்டுள்ளார்.

இதனால் வாந்தி மற்றும் வயிற்றோட்டம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-3)

## அடுத்...

நரேந்திர மோடியுடன் சந்திப்பொன்றை ஏற்படுத்தித் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த சில காலமாகக் கோரிக்கை விடுத்து வந்தது.

இதனடிப்படையில் எதிர்வரும் ஓரிரு தினங்களில் இரா. சம்பந்தன் தலைமையிலான தூதுக் குழுவொன்று இந்தியாவுக்குச் செல்லவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழுவில் இரா.சம்பந்தனுடன் செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3)

## அடுத்தடுத்து...

முனை, செம்மலைப் பகுதிகளிலும் காஸ் அடுப்பு வெடித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-3,281)


# சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை

வட மாகாணத்தினை தளமாகக் கொண்டு இயங்கும் ஆய்வுகூடத்திற்கு **சந்தைப்படுத்தல்** மற்றும் விற்பனை முகாமையாளர் ஒருவர் வேண்டப்படுகிறார்.

- **வயது எல்லை : 25 - 35**
- **முன்அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.**

நீங்கள் விண்ணப்பிக்க விரும்பினால் பின்வரும் மின் அஞ்சலுக்கு உங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும்.



What's app number

**career.smjf@gmail.com | 077 921 3789**

(C-3168)



### தன நிதானய

திகதி - 2021.12.04
சீட்டிழுப்பு இலக்கம் - 636

ஆங்கில எழுத்து: P
வெற்றி இலக்கங்கள்: 05 37 56 64

தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 04.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2901

ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 08 19 31 41

தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2021/12/04
சீட்டிழுப்பு இலக்கம் 4606

ஆங்கில எழுத்து: B
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 4 4 3 4 1 5

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 04/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0954

வெற்றி எழுத்து: U
சுப்பர் இலக்க: 10
வெற்றி இலக்கங்கள்: 16 39 57 73

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 04/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1176

வெற்றி இலக்கங்கள்: கும்பம் 9 6 5 1 6 6

தேசிய லொத்தர் சபை

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 107
சீட்டிழுப்பு திகதி 04.12.2021
சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 25 | 42 | 48

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,431,900/-

அபிவிருத்தி லொத்தர் சபை

### அத கோடிபதி

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1409
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 04.12.2021

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,228,120

வெற்றி இலக்கங்கள்: 20 39 68 77
ஆங்கில எழுத்து: E

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3744
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 04.12.2021

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,767,780

வெற்றி இலக்கங்கள்: 04 35 46 67
ஆங்கில எழுத்து: M

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1583
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 04.12.2021
தினம் சனிக்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Y 26 55 60 69

அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 73,126,308/=

அபிவிருத்தி லொத்தர் சபை

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,956,381/=

திகதி 04.12.2021
வெற்றி வாரம் 3295
வர்ணம் இள நீலம்

வெற்றி இலக்கங்கள்: 15 18 34 39 கன்னி

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,922,720/=

அபிவிருத்தி லொத்தர் சபை

### සංවර්ධන වාසනාව — அபிவிருத்தி அதிர்ஷ்டம்

திகதி : 2021-12-04
வெற்றி வாரம் : 465 | வர்ணம் : சிவப்பு

சுப்பர் ஜக்பொட் ரூ. 11,326,920/-

ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 61 25 11
விதி எண்: 7

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,595,980/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,438,924/-

அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8904)

**076 825 7716** (ஆகாஸ்)

## வரன் தேவை

உயர் சைவ மரபில் பிறந்த 29 வயதாகும் சுவிற்சர்லாந்தில் பிறந்து வைத்தியராகப் பணி புரியும் நன்கு தமிழறிவுடைய பெண்ணுக்கு வரனைத் தேடுகிறோம்.
தொடர்புகளுக்கு WhatsApp மூலம் sms இல் தொடர்பு கொள்ளவும். (C-3164)

**+41779695906** (தரகர்)

## வேலையாட்கள் தேவை

இல.86, பருத்தித்துறை வீதியில் இயங்கும் Hotel ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

வரவேற்பாளர் (ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர் விரும்பத்தக்கது)
Room Boy (அனுபவமுள்ளவர்)

காலம் - 6.12.2021 திங்கட்கிழமை
9.00am - 12.00pm
C.V உடன் நேரில் சமுகம் தரவும்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு (8919)

**021 221 7770**
**077 256 1990**

## கடை / வீடு வாடகைக்கு தேவை

- பலாலி வீதியில் திருநெல்வேலி சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்
- பிறவுண் வீதியில் கலட்டி சந்தியினை அண்மித்த பகுதி
- நாவலர் வீதி மற்றும் இராமநாதன் வீதி
- கஸ்தூரியார் வீதி
- யாழ். நகர் மத்திய பகுதி

(8889)

**☎-074 010 1051**

## A/L - 2021 தமிழ் கருத்தரங்கு

8 நாட்கள் நடைபெறும்

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு அதிகளவான "A" தரச் சித்திகளைப் பெற்றுத்தந்த ஆசிரியர்

**பா. பத்மநாதன்**

B.A (Hons) [Tamil Spl.] - 1st Class, M.A (Tamil) - 1st Class, M.Ed. (Hons) - 1st Class, Dip in Ed.

கருத்தரங்கு நடைபெறும் கல்வி நிலையங்கள் (8878)

C.C.A. - சுன்னாகம்
ஆரம்பம் : 6.12.2021 - 3.00 P.M

மொடேண் - சண்டிலிப்பாய்
ஆரம்பம் : 8.12.2021 - 3.00 P.M

வெளி மாணவர்களுக்கும் அனுமதியுண்டு.

## விற்பனைக்கு

**யாழ். நகரப் பகுதியில் கடைகள், காணிகள், வீடுகள் விற்கவும் வாங்கவும் முடியும்.**

யாழ். ஸ்ரான்லி வீதியில் 1/2 பரப்புக்காணி, யா/ சத்திரச்சந்தியில் 3 பரப்புக்காணி, நல்லூர் செட்டித்தெருவில் 2 பரப்புக் காணிக்குள் (வீடு, கடை, வாகனத் தரிப்பிடமும் உண்டு). திருநெல்வேலி சந்தியில் 2 கடைகள், கே.கே.எஸ்.வீதியில் மாடிக் கட்டடம், யாழ். ஸ்ரான்லி வீதியில் 5 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

மேலும் இலங்கையில் எப்பாகத்திலும் காணிகள் வாங்கவும் விற்கவும் எம்மால் முடியும்.

தொடர்பு: VIMB
**077 522 1132, 076 534 6562** (8932)

## Vacancy

Receptionist, cashier, Data Entry operator, store Keeper, Accounts clerk, computer operator, Pharmacy staffs, CCTV Technical, Air ticketing staffs, Delivery boy (part time).

**077 143 3368** (8894)

## மாபிள் கிளினிங்

சமையல் அறை, குளியல் அறை மற்றும் அனைத்து மாபிள் கிளீன் வேலைகள் தரமானதாக செய்து தரப்படும்.

தொடர்பு (8918)
**077 803 3199**

## வேலையாட்கள் தேவை

- சமையல் உதவியாளர்
- சுத்திகரிப்பாளர்
- களஞ்சியப்படுத்துனர்
- விற்பனையாளர்

(C-3170)

**☎-077 725 9245**

## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள Hotel ஒன்றிற்கு கீழ்வரும் பணியாளர்கள் உடன் தேவை.

- சமையலாளர் (Chef)
- வெயிற்றர் (Waiter)
- உதவி சமையலாளர்
- வரவேற்பாளர் - பெண்கள்
- Room boy

தொடர்புகளுக்கு (8933)
**077 788 7271**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



(C-3166)

தமிழ்ச்சுடர், ஞான ஏந்தல், அறநெறிச்சுடர், கலாபூஷணம்
பண்டிதை
**திருமதி வைகுந்தம் கணேசபிள்ளை**
( அதிபர் – அறநெறிப் பாடசாலை, அமைப்பாளர் – திருநெறிய தமிழ் மறைக் கழகம், இலக்கியத்துறைப் பொறுப்பாளர் – இணுவில் பொது நூலகம் )

அவர்களுக்கு அண்மையில் **"யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறையின் இரண்டாவது அனைத்துலக தமிழியல் ஆய்வு மாநாட்டில் கௌரம் பெறும் புலமையாளர்கள் - 2021"** வரிசையில் தமிழ் இலக்கியப் பணிக்கு அவர் ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாக சிறப்புக் கௌரவம் வழங்கப்பட்டது.

அந்த வகையில் இவர் 32இற்கும் மேற்பட்ட நாட்டிய நாடகங்களை இயற்றியுள்ளார். இவற்றில் மாகாண தேசிய விருது 10இற்கும் மேற்பட்டவை பெற்றுள்ளன. இவரால் 25இற்கு அதிகமான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் "ஆசிரியர் மேன்மை விருதும்" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அவரது சமய, தமிழ் இலக்கியப் பணிகள் பரராஜசேகரன் அருளால் மேலும் சிறக்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர் :
திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினர்,
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை,
இணுவில் பொது நூலகம் சனசமூக நிலையத்தினர்,
இணுவில் வாழ் மக்கள்.

## வேலை வாய்ப்பு

யாழ். நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலைக்கு சந்தைப்படுத்தல் துறையில் உடனடி வேலை வாய்ப்பு.
**கவர்ச்சிகரமான வேதனம் வழங்கப்படும்.** (8924)

**077 337 4595/076 255 5529**


## கொரோனா +740

கொரோனா தொற்று உறுதியான மேலும் 740 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 566,936 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)


## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு Service man தேவை.
தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு (8922)
**077 232 3000**

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS** (C-3133)

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர்)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 15'000/-
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777-068-777
v2vacancies@gmail.com

## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18 - 30 வரை. வேலை நேரம்: காலை 7.30 மணி - 5.30 மணி வரை.
மாத வேதனமாக 17,000/= - 25,000/= வரை வழங்கப்படும். (8883)

**074 049 0003**

## கனடாவில் வேலைவாய்ப்பு

WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS/ DIPLOMA/DEGREE
ஆங்கில அறிவு (C-3169)



அனைத்து துறைகளிலும் அனுபவம் அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3132)

0768226240


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 321

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 05.12.2021 தொலைபேசி : 021 222 3378

## ஆரியகுளம் எங்கள் வரலாற்றுச் சின்னம்

## தமிழரை அச்சுறுத்தும் ஆயுதம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இண்டைக்கு வாத்தியாற்ற முகத்தில ஒரு மலர்ச்சி தெரியுது. என்ன சங்கதி. மூப்பர் விசாரித்தார்.

வாத்தியார்: அதொண்டுமில்ல மூப்பர் யாழ்ப்பாணத்து ஆரியகுளம் புனரமைக்கப்பட்டு மகிழ்வூட்டும் திடலாக அது மாற்றம் செய்யப்பட்டது எனக்கு மிகுந்த சந்தோசம்.

என்னைப் பொறுத்தவரை ஏதாவது நல்ல வேலை நடக்கவேணும்.

எங்கட இளம் சந்ததியினர் ஒரு தூய்மையான சிந்தனையோடு வாழ்வதற்குத் தூய்மையான நகரம், வனப்பு மிகுந்த இயற்கை வளங்கள், திராவிடக் கட்டடக் கலையை வெளிப்படுத்தும் கட்டடங்கள் என எங்கும் அழகு பொலிய வேணும். அப்பதான் எங்கட பிள்ளைகளின்ர மனதில தூய்மையும் அழகும் ஆளுமையும் பிரகாசிக்கும்.

விதானையார்: வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. வீதிகளில இப்பவும் குப்பை போடுகினம். தங்கட வீட்டில பாவிச்ச பம்பஸை வீதிகளில போடுற அளவில தானே எங்கட மனச்சாட்சி இருக்குது.

பண்டிதர்: தன்ர வீடு சுத்தமாக இருக்க வேணும் எண்டு நினைக்கிறவியள், மற்றவியளின்ர வீடுகளும் வீதிகளும் துப்புரவாக இருக்க வேணுமெண்டல்லோ நினைக்க வேணும்.

சாத்திரியார்: பண்டிதர் நீங்கள் சொல்லுறதில நியாயம் இருக்குது. ஆனால் யாரெல்லாம் தர்மத்தை மீறி நடக்கினமோ அவையளெல்லாம் எண்டைக்கோ கடவுளின்ர தண்டனைக்கு ஆளாகுவினம். இதுதான் உண்மை.

சிறாப்பர்: சாத்திரியார் இப்ப எங்கதான் தர்மம் இருக்குது.

மூப்பர்: என்ன சிறாப்பர் சொல்லுறியள்.

சிறாப்பர்: இந்தாப் பாருங்க மதமாற்றம் செய்யிறதில சில சபைகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.



## மதவாதத்தை அடியோடு விடுத்து தமிழின் பேரால் ஒன்றுபடுவோம்

அண்டைக்கு மாங்குளத்தில மதமாற்றத்தில ஈடுபட்ட மூவர் கொண்ட குழுவினர்; சைவக்கடவுளை சாத்தான் எண்டு கூறி மதம்மாற வேணும் எண்டு அதட்டியும் இருக்கினம்.

கங்காணி: அதுதானே அந்த மூவரையும் பொலிஸார் கைது செய்தவியள்.

விதானையார்: நீங்கள் இதைச் சொல்லுறியள். கொரோனாக் காலத்தில நாடு முடங்கிக் கிடந்த போது தொலைபேசியில அழைப்பு எடுத்து மத மாற்றம் செய்யிறவியள் செய்த தொந்தரவு கொஞ்சமோ.

வாத்தியார்: சில மதமாற்றச் சபைகள் சைவமயத்தவர்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களை மதம் மாறும்படி கேட்கினம். இப்படிச் சைவமக்கள் அவையளின்ர வீடுகளுக்குப் போய் உங்கட தாய்ச்சமயம் சைவசமயம். எனவே மீண்டும் உங்கட தாய்ச் சமயத்திற்கு வாருங்கள் எண்டால், அதை ஏற்றுக் கொள்வினமோ.

விதானையார்: உலக்கை எடுத்து அடிச்சுத் தான் துரத்துவினம்.

பண்டிதர்: அதுதான் அவையள் அப்படிச் செய்யக்கூடியதை சைவமக்கள் செய்தால், மதம்மாற்றுகிறவர்கள் ஏன் மற்றையவர்களின்ர வீடுகளுக்குச் செல்லப் போகினம். வீடுவீடாகச் சென்று மதம் மாற்றுகிற வியாபாரம் இலாபம் தராது எண்டதோட உடம்புக்குச் சேதத்தைத்தான் தரும் எண்ட பயத்தில அதை நிறுத்திப்போடுவினம்.

கங்காணி: என்னைப் பொறுத்தவரை மதம் மாற்றம் செய்யிறவியளை மட்டும் நான் குறை சொல்லமாட்டன். மத மாற்றம் செய்யிறவியள் வீடுகளுக்கு வருகின்ற போது அவர்களை வரவேற்று அவையளின்ர கதையைக் கேட்கிறவியளும் பிழைதானே.

சாத்திரியார்: அப்ப என்ன கங்காணியார் செய்யவேணும்.

கங்காணி: மதம் மாற்ற வாறவியளுக்கு இங்க இடமில்லை. அவரவர் சமயத்தில அவரவர் இருப்பதற்கு இடம் கொடுங்கள். மதம் மாற்றும் ஈனத்தைச் செய்யாதீர்கள். உங்களின் இச் செயல் மிகப்பெரும் துரோகத்தனமானது. இது உங்கள் குடும்பத்திற்கும் உங்கள் சந்ததிக்கும் ஈனத்தைச் செய்கின்ற பாவச்செயல் என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூற வேணும்.

எதுவா இருந்தாலும் ஆலடியில ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவம்.

வாத்தியார்: என்ன தீர்மானம் கங்காணியார்.

கங்காணி: தமிழர் தேசத்தில் எங்கட தமிழ் இனத்தின் பேரால் ஒற்றுமைப்படுவோம். சமயம் எங்கள் வழிபாட்டிற்கும் ஆன்மிக எழுச்சிக்குமானதாக இருக்கட்டும். சமயத்தின் பெயரால் தமிழர்கள் ஒருபோதும் பிரிந்துவிடக்கூடாது என்று ஒரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம் எனச் கங்காணியார் கூற, அனைவரும் எழுந்து நின்று அந்தத் தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டு மீண்டும் அமர்ந்தனர்.

அந்நேரம் பண்டிதர் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார். இதனை அவதானித்த மூப்பர் என்ன பண்டிதர் ஐயா கடுமையாக யோசிக்கிறியள்.

பண்டிதர்: மூப்பர், என்ர யோசனையெல்லாம் எங்கட தமிழினம் சமயத்தின் பேரால் பிரிந்து விடுமோ? என்ற ஏக்கம்தான்.

கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர்களை நினைவேந்துகின்ற இடங்களில எங்கட கத்தோலிக்க மதகுருமார் ஒருவரும் இல்லை எண்டு அறிஞ்சன். அதை அறிஞ்சபோது வேதனையாக இருந்தது.

தேவையில்லாத குழப்பங்களை ஏற்படுத்திவிட்டு, மாவீரர்களை நினைவேந்துகின்ற அந்தப் புனித நாளில ஒதுங்கி நிற்பது எந்தவகையில நியாயம்.

ஆகையால இனி மேலாவது நவம்பர் 27 மாவீரர் நாளில நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு எங்கட பிள்ளைகளை நினைவேந்துவோம்.

இவ்வாறு பண்டிதர் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்தப்படும் தமிழினம்

**சிங்களப் பிரதேசங்களில் அவர்களின் பூர்வீக நிலங்களைச் சுவீகரிக்க முற்பட்டாலும் இப்போது இங்கு எழுந்துள்ள அதே எதிர்ப்பு அங்கும் எழும் என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.**



இலங்கையில் இனங்களுக்கிடையிலான பிரச்சினையைக் கொதி நிலையில் வைத்திருக்கவே விரும்புகிறது ஆட்சிபீடம்.

அப்பிரச்சினைகளைத் தீர்க்கவோ தீர்வுகாணவோ விரும்பாமல் தமது அரசியல் ஆதாயங்களுக்காக தொடர்ந்து இனங்களுக்கிடையிலான பிரச்சினையைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கின்றனர்.

அதிலும் தமிழ்த் தாயகமான வடக்கு- கிழக்கில் தமிழ் மக்களை ஓர் உள நெருக்கீட்டின் மத்தியில் வைத்திருந்து அதை ஒரு பிரச்சினையாகக் காட்டி இனவாதத்தைத் தூண்டும் செயல்களும் தாராளமாய் நடந்தேறுகின்றன.

ஆம், அண்மைக்காலமாக வடக்கு- கிழக்கில் ஆட்சியாளர்கள் சரி, படையினர் சரி இவர்கள் நடந்து கொள்ளும் விதம் அவற்றை எடுத்துக் காட்டுகின்றன.

இதில் மாவீரர் நாள் நினைவேந்தலுக்கான நீதிமன்ற அனுமதிகளையும் கணக்கில் எடுக்காது மக்களின் நினைவேந்தும் உரிமைகளை தட்டிப்பறிக்கும் விதமாக அரச தரப்பு நடந்து கொண்ட விதம் மிக மோசமானது.

ஆயுதம் தாங்கிய படையினர் நினைவேந்த வந்தவர்களை அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டமையினைப் பலர் கண்டித்திருந்தாலும் அரச தரப்பு அதைப் பொருட்படுத்தவில்லை.

அதிலும் முல்லைத்தீவில் நினைவேந்தல் நிகழ்வுகளில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டதுடன் ஒருவர் தாக்குதலுக்கும் உட்பட்டிருக்கின்றார்.

இத்தாக்குதலைப் படைச்சிப்பாய் ஒருவர் மேற்கொண்டுள்ளார். முள்ளுக்கம்பி சுற்றப்பட்ட பச்சை மட்டையால் செய்தியாளர் தாக்கப்பட்டிருக்கின்றார் எனின், இது ஒரு திட்டமிட்ட செயல் என்பதை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட முட்கம்பி சுற்றப்பட்ட மட்டை தாக்குதலை மேற்கொண்ட படைச்சிப்பாய் போன்றவற்றின் படங்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலும் அவ்வாறு ஒரு நிகழ்வு நடைபெறவில்லை என படைத்தரப்பு அறிவித்திருந்தமை வேதனைக்குரியது.

நிலை இதுவாக இருக்கையில், தமிழர் பூர்வீக நிலங்களை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கும் செயற்பாடுகள் மிகத் தாராளமாக நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் மாதகலில் கடற்படையினருக்கு காணிவழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொதுமக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டன.

ஆயினும் அவ்விடத்தில் கடற்படையினர் நடந்து கொண்ட விதம் மிகவும் மோசமாக அமைந்திருந்தது.

தமது பூர்வீக நிலங்களை பறிகொடுக்க எவரால்தான் முடியும். அந்த இடத்தில் யார் இருந்தாலும் எதிர்க்கவே செய்வர். அவ்வாறே மாதகல் பிரதேசத்திலும் படையினருக்கான காணி சுவீகரிப்பு நிகழ்வை பொது மக்கள் அதிலும் பெண்கள் கூடி எதிர்த்தனர்.

ஆனால் அவ்விடத்திற்கு வந்த கடற்படையினர் பெண்களை அச்சுறுத்தும் வகையில் தடிகள், கொட்டன்களுடன் பிரசன்னமாகியிருந்ததுடன் மிகவும் அச்சுறுத்தும் விதத்தில் நடந்து கொண்டனர்.

அதிலும் அங்கு வந்திருந்த புலனாய்வாளர்கள் பெண்களை நோக்கி கைகளை நீட்டி அச்சுறுத்தல் விடுத்ததுடன் அவர்களைப் புகைப்படம் எடுக்கும் செயற்பாட்டில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

தமது பூர்வீகக் காணிகளைப் படையினருக்கு வழங்க எடுக்கும் நடவடிக்கைகளை சாத்வீகமாக எதிர்க்கும் உரிமைகூட தமிழினத்திற்கு இல்லையோ என்ற கேள்வி இங்கு மிகத்தீவிரமாக எழுந்துள்ளது. இது மாத்திரமன்றி தொல்பொருள் சின்னங்கள் எனும் போர்வையில் தமிழர் நிலங்களை அபகரிக்கும் செயற்பாடுகளும் மிகத் தாராளமாக நடந்து கொண்டிருக்கின்றன.

கடந்த நவம்பர் 6 ஆம் திகதி தொல்பொருள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க காரைநகரில் தொல்பொருள் சின்னம் இருப்பதாகவும் அதைப்பார்வையிடவும் சென்றிருந்தவேளை பொதுமக்கள்கூடி தமது எதிர்ப்பினை வெளியிட்டிருந்தனர்.

இது எமது சொந்தநிலம். இதை அபகரியாதீர் என அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஒரு இனம் பூர்வீகமாக வாழும் நிலத்தை இவ்வாறு தமது தேவைக்காகவும் இனவாதத்தைத் தூண்டும் வகையிலும் அபகரிப்பதென்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு விடயமல்ல.

நாடு கேட்டுப் போரிட்ட தமிழினம் பட்ட துன்பங்கள் ஏராளம். ஆனால் அதை ஆட்சியாளர்கள் உணர்ந்து கொள்கின்றனரா என்றால் இல்லை என்பதே பதில்.

சரி, உணர்ந்துதான் கொள்ளவில்லை. மேலும் மேலும் அவர்களை உள நெருக்கீட்டிற்குள்ளாக்கும் செயற்பாடுகளில் ஏன் ஈடுபடவேண்டும்.

தமிழினம் எதைச் செய்தாலும் அதைப் பயங்கரவாதம் என்ற பூதக் கண்ணாடியூடே நோக்கும் செயற்பாட்டை ஆட்சியாளர்கள் நிறுத்த வேண்டும். தொடர்ந்து தமிழினத்தைக் காயப்படுத்தும் செயற்பாடுகளைத் தவிர்த்து நடந்து கொள்ள வேண்டும்.

அண்மையில் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஒரு தமிழ்ப் பிரதிநிதியைக்கூட இணைக்காமல் சிங்கள- முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்டு அக்குழுவை அமைத்த செயல் தமிழர் மனங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை ஆட்சியாளர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஏதோ தமிழர் என்றால் பயங்கரவாதிகள் என்ற தோரணையில் அவர்கள் எதைச் செய்தாலும் அவர்களை அடக்கி ஒடுக்கும் செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.

வடக்கு- கிழக்கு தமிழர்களின் தாயகபூமி. அதைக் கபளீகரம் செய்யும் செயற்பாட்டை தமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்கமாட்டர்.

இதே சிங்களப் பிரதேசங்களில் அவர்களின் பூர்வீக நிலங்களைச் சுவீகரிக்க முற்பட்டாலும் இப்போது இங்கு எழுந்துள்ள அதே எதிர்ப்பு அங்கும் எழும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இவற்றை உணர்ந்து, தமிழர் பிரதேசங்களை தொல் பொருள் சின்னம் என்றும் படையினர் தேவைக்கு என்றும் சுவீகரிக்கும் செயற்பாடுகளை நிறுத்தி தமிழினத்தை ஒரு பரபரப்பான உள நெருக்கீட்டுடன் கொதி நிலையில் வைத்திருப்பதை ஆட்சியாளர்கள் கைவிட வேண்டும்.

இதுவே இந்த நாடு தமிழினத்திற்கும் உரித்துடையது என்ற எண்ணத்தை விதைக்கும் அவ்வளவே.

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழகத்தின் தருமபுரம் ஆதீனத்தால்

# "சிவாகம கலாநிதி" பட்டம் பெறும் இரு யாழ். சிவாச்சாரியார்கள்



மஹாராஜஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள்

சிவஸ்ரீ தானுநாத மஹாதேவகுருக்கள்

விப்ரசிரேஷ்டர்களான மஹாராஜஸ்ரீ நகு லேஸ்வர குருக்களும் இணுவில் காய த்ரி பீடம். தர்மசாஸ்தா குரு குல அதிபர் "வேதசிவாகம பாஸ்கர "சிவஸ்ரீ தானுநாத மஹாதேவ குருக்களும் தமிழகத்தின் தருமபுரம் ஆதீ னத்தால் சிவாகம கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமஹா சந்நிதா னம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த சுவாமி கள் இவ் உயரிய பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இலங்கை இந்துக் குருமார் அமைப்பு இதற்கான பரிந் துரையை வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4-5)



முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் 50 மில்லியன் ரூபாய் நிதி உதவியில் அமைக்கப்பட்ட பூவசரங்குளம் ஏற்று நீர்ப்பாசன திட்டத்தினை வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று முன்தினம் திறந்து வைத்தார். (படம்: தவசீலன்)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் இரத்ததான முகாம் நிகழ்வு இளவாலை நாவலடிச் சந்தியில் அமைந்துள்ள கலைமகள் படிப்பகத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது. (படம்: ரவிசாந்)



# சிறுவர் அரங்கம்

# மகாபாரதம்

ஒருமுறை ருசிக ண் டவர்க்கு மேலும்மேலும் அப்பொருளைப் பெற வேண்டும் என்ற ஆசை உண்டாகும்.

ஆசையை உண்டாக் கும் பொருளைப் பற்றிப் பிறர் பேசக் கேட்காமல் இருக்க வேண்டும்.

அப் பொருளைப் பார்க்காமல் இருக்க வேண்டும். தொடாமல் இருக்க வேண்டும்.

மனிதரில் சிலர் கல் வியிற் சிறந்தவராயும், வலிமை மிக்கவராக வும், அனுபவம் உள்ள வர்களாக இருந்தும் பாவ காரியங்களில் ஈடுபடுகின்றனர்.

யாராய் இருந்தாலும் அப்பிறவியாயினும் யாரும் உயிரை விட விரும்புவதில்லை. அந் தந்தப் பிறவியில் அதத




அகஸ்தியர்-இல்வலன்

ற்குரிய இன்பம் ஒன்று இருக்கிறது. எனவே தான் எந்த உயிரும் அந்த இன் பத்தை அனுபவிக்க விரு ம்புகிறதே ஒழிய இறக்க விரும்புவதில்லை.

உடற்குறையுள்ள மனி தர் பலர் உள்ளனர். கை இல்லாதவர்களும், கால் இல்லாதவர்களும், ஒரு பக்கம் செயல் இழந்த வர்களும் ஆக இப்படி ஊனத்துடன் விளங்கு வோர் பலர். நீயோ உடற்குறை ஏதுமின்றி நோயும் இன்றி இருக்கி றாய். உனக்குக் கெட்ட பெய ரும் இல்லை. இந் நிலையில் கிடைத்தற்கு அரிய உயிரை விடுதல் நல்ல தன்று.

எனவே உற்சாகத்து டன் எழுந்திரு. தருமம் செய். தானம் செய். மன த்தை அடக்கு. சக்திக்கு ஏற்றாற் போல தியாகம் செய். நற்கதி அடை வாய். இப்பிறவியில் நல்லது செய்தால் அதன் பயனை அடுத்த பிறவியில் நன்கு அனு பவிப்பாய்.

நான் சென்ற பிறவி யில் நல்லது செய்ய வில்லை. ஆகமங்களை பழித்தேன். விதண்டா வாதம் பேசினேன். அற வோரை பழித்தேன். ஒன்றும் அறியா நான் மேதாவி போல நடந்து கொண்டேன். அதனால் நரியாக பிறவியெடுக்க நேர்ந்தது.

இந்த இழி பிறவி யி லிருந்து விடுபட்டு என க்கு மனிதப் பிறவி கிடைக்குமா? அப்படிக் கிடைத்தால் அதிலா வது மன நிம்மதியுடன் இருப்பேனா?" என தனது விலங்குப் பிறவி குறித்து இரங்கிக் கூறி முடித்தது.


அது கேட்டு இளந் துறவி வியப்புற்று எழு ந்தான். அறிவு மிக்க நரி யின் சொல்லைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தான். அது நரியன்று என தன் ஞானக் கண்ணால் உண ர்ந்தான்.

நரி வடிவில் வந்து நன்னெறி காட்டியவன் இந்திரன் என்பதை உண ர்ந்தான். பின் அற நெறி யில் வாழ்ந்தான்" என பீஷ்மர் தருமருக்கு நல் அறிவுதான் இன்பத் திற் குக் காரணம் என்பதை இக்கதை மூலம் தெரி வித்தார்.

### அகஸ்தியர்-இல்வலன்-வாதாபி பற்றிய கதை

பாண்டவர்கள் தீர்த்த யாத்திரையின் போது மணிமதி என் னும் நகரத்தில் தங்கி இருந்தனர். அப்போது யுதிஷ்டிரர் லோமசரை நோக்கி, "இல்வலனை யும், வாதாபியையும் அகத்தியர் ஏன் அழித் தார்?" என வினவ முனி வர் சொல்லலானார். இல்வலன் என்னும் அசு ரன் மணிமதி நாட்டை ஆண்டு வந்தான். அவன் தம்பியின் பெயர் வாதாபி. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட அரசின் கதி எப்படி இருக்கப்போகிறது?

**பாலசுந்தரம் அம்பனை**

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அரசிலிருந்து வெளியேறி மாகாணசபை ஆட்சியைக் கைப்பற்றும் பலம் இருக்கிறதா வியாசரே?**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு யார் காரணம். உண்மையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவ் விடயம் முன்கூட்டியே தெரியுமா?இந்த இரண்டு விடயங்களுக்கும் விடை கிடைத்தால் சுதந்திரக் கட்சியால் மீண்டு வர முடியும்.

இதில் முக்கியமான விடயம் ஒன்று உண்டு. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிளவிற்கு யார்? எது காரணம் என்பதைக் கண்டறிவது. அது அனைவருக்கும் தெரிந்த விடயம்.எனினும் அதிலிருந்து மீண்டு சுதந்திரக் கட்சியைக் கட்டமைக்கும் பணிகளை மேற்கொண்டால் மீட்சி உண்டு.

**தாரு வதிரி**

**ஒமிக்ரோனும் ஆட்டிப் படைக்கப் போகிறது போல இருக்கிறதே?**

பிறகு.கொஞ்ச நஞ்ச ஆட்டமா போட்டான் மனிதன்.நிலம், நீர் , காற்று என அத்தனை இயற்கைகளையும் சுரண்டி நாசம் செய்து இயற்கையால் ஆன இந்த உலகை நரகமாக்கினான்.

அதிலும் இந்த உலகம் மனித குலத்திற்கு மாத்திரம் சொந்தமானது என்று மற்றைய அத்தனை உயிரையும் தன் சுயநலனுக்காய் அழித்தான்.

பேசத் தெரியாத ஒரே காரணத்தால் அந்த உயிர்களின் பேச்சு இங்கு எடுபடவில்லை. ஆனால் இன்று அந்த மிருகங்கள்-பறவைகள்- ஊர்வன மகிழ்வாய் இருக்கின்றன. ஆனால் மனித குலம்?

**தமிழ் யாழ்ப்பாணம்**

**உங்களை ஒரு நாள் மட்டும் ஜனாதிபதி ஆக்கிப் பார்க்க ஆசை வியாசரே?**

ஏன் தம்பி உமக்கு என்ன பிரச்சினை? ஏன் இப்படி குண்டக்க மண்டக்க பேச்சுப் பேசுகிறீர்கள்.

நாடு இருக்கின்ற நிலையில் நான் ஜனாதிபதியா? அதுவும் ஒருநாள் ஜனாதிபதியா? இப்பவோ அப்பவோ என இழுத்துக் கொண்டிருக்கும் ஒருவருக்கு எந்த விசேட வைத்தியர் வந்து வைத்தியம் செய்தாலும் சரிவராது தம்பி.

நாடு இப்ப இருக்கிற நிலை இதுதான். எரிபொருள் இல்லை. எரிவாயு இல்லை. கையில காசு இல்லை, கடன் வேண்ட கடன் தரவன் இல்லை. வயலிலை நெல்லு இல்லை. பொருட்களின்ர விலைக்கு எல்லை இல்லை. வீட்டு அடுப்பிலை நெருப்பில்லை, எங்கட வயிறில அது நிறைய உண்டு.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**ரிது யாழ்ப்பாணம்**

**அண்ணாத்த திரைப்படம் நன்றாக இல்லை என விமர்சிக்கிறார்களே வியாசரே?**

ஆட்டு மந்தைகள் இருக்கிறதே,அவற்றில் முதலாவதாய் போகும் ஆடு எப்படி பாய்ந்து-பதுங்கிப் போகிறதோ அவ்வாறே மிச்ச அனைத்தும் செல்லும்.

அண்ணாத்த திரைப்படத்தின் ஆரம்ப விமர்சனம் அப்படி அமைந்ததால் மந்தைகள் போல் பலரும் அதே விமர்சனத்தை விமர்சிக்கின்றார்கள்.


பல கோடி பணத்தைக் கொட்டி படம் எடுத்து வெளியிட அதை அசால்டாய் விமர்சிப்பவர்கள் இருக்கும் வரை திரைப்படங்களுக்கு ஆரோக்கியமான விமர்சனங்கள் வரவே வராது.

**சுதன் குப்பிழான்**

**மூன்றில் இரண்டு பெரும்பான்மை கொண்ட அரசின் கதி எப்படி இருக்கப்போகிறது?**

அது தான் அரசின் குடுமி எங்களின் கைகளிலேயே இருக்கிறது. எங்களை விமர்சித்தால் நாங்களும் உங்களை விமர்சிக்கக் காரணம் தேட வேண்டிவரும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றில் பாய்ந்திருக்கின்றாரே.

ஆம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேறினால்அரசுக்கு 2/3 பெரும்பான்மை அமைவது கடினம் என்றும் அவர் கூறி இருக்கின்றார். வாழ்க்கை என்பது வட்டம் போன்றது, அது சுற்றிக்கொண்டே இருக்கும். அதன் தொடக்கத்தையும் முடிவையும் கண்டுபிடித்து விட முடியாது.



உங்களை ஒரு நாள் மட்டும் ஜனாதிபதி ஆக்கிப் பார்க்க ஆசை வியாசரே?

**திருவரதராசா வவுனியா**

**அரசியலில் முட்டிமோதி சீரழியாமல் அன்பால் அரவணைத்துச் செல்ல முடியாதா?**

முட் கிரீடத்தை தலையில் வைத்து சிலுவையில் நிறுத்தி இருகைளையும் விரித்து கால்களைப் பிணைத்து ஆணியில் அறைந்த போதும் அன்பாய், கருணையாய் பார்ப்பதற்கு யேசுநாதர்கள் இங்கு இல்லை. முட்கள் நிறைந்த சிம்மாசனத்தைக் கட்டியணைக்கச் சொன்னால் யாரால் சிரித்துக் கொண்டிருக்க முடியும்.

அரசியல் என்பது புறம்பேசுதல் - குழிபறிப்பு- நயவஞ்சகம்- நேர்மையின்மை- சுயநலம் போன்ற நல்ல குணங்களைக் கொண்டது. இதில் பொய்மைக்கு மட்டுமே வீரியம் அதிகமாய் இருக்கும். உண்மைகள் அதில் பொசுங்கிவிடும்.

**நவீன் யாழ்ப்பாணம்**

**அறிவு இருப்பவனையும் அறிவு இல்லாதவனையும் எப்படி கண்டுபிடிப்பது வியாசரே?**

ஒரு விடயத்தை ஒருவர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் அவ்விடயம் எவ்வாறு செய்ய வேண்டும்.

அதில் வரும் சவால்கள் என்ன, அந்த சவால்களை எப்படிச் சரி செய்வது என பல விளக்கங்களைக் கொடுக்கிறார்.

அந்த விளக்கங்கள் எதையும் பொறுமையாக கேட்காமல் ஒருவன் முதலில் எழுகிறான்.

இன்னொருவன் அனைத்தையும் கேட்டு முடித்துவிட்டு தனக்குள்ள சந்தேகங்களையும் கேட்டு தெளிவு பெற்று விட்டு எழுகிறான். இதில் யார் புத்திசாலி நீங்களே கூறுங்கள்?

**சிவம் வதிரி**

**யாரும் உங்களை கை நீட்டிப் பேசினால் உங்களால் என்ன செய்ய முடியும் வியாசரே?**

என்ன செய்ய முடியும் சிரித்துவிட்டுப் போகத்தான் முடியும்.

இப்போது எவரிடமும் மனிதம் இருப்பதாகத் தெரியவில்லை.

எங்கள் காலத்தில் பெரியவர்கள் நிற்கும் இடத்தில் கூட சிறியவர்கள் நிற்க முடியாது. அவ்வளவுக்கு மரியாதையும் பண்பும் நிறைந்திருந்தது.

ஆனால் இப்போது பெரியவர்களுக்கு தெரியாத அத்தனை விடயங்களும் சிறியவர்களுக்கு தெரிந்திருக்கின்றது என நிலைமாறி விட்டது.இதைத்தான் கலியுகம் என்று கூறுகிறார்கள் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை என்பது மானுடம் அல்ல

அடவியின் நடுவில் அன்பான குட்டிகள்
அருகில் பசியுடனே ஒரு பாயும் பெண் புலி
அந்திசாயும் வேளை
அங்குமிங்கும் அலைச்சல்
புதருக்கருகே வந்த புலி
பசு ஒன்றினைப் பார்த்தது
கால்களால் அடித்து, பற்களால் கடித்து,
உதிரம் குடித்து
பலி கொள்வதற்கான நேரான ஒரு பாய்ச்சல்
உணவாக்குவதொன்றே உள்நோக்கம்- ஆனால்
நிமிட இடைவெளியில் நிகழ்ந்தது வேறு.
கன்றுபோட்ட நிலையில் அந்தக் காராம்பசு,
நின்றது, நிதானமானது
வேங்கையின் நோட்டம்
காட்டின் அயலெங்கும்
கழுதைப்புலிகள் கூட்டம்
பாயும் புலியிடம் ஓர் பரிவு:
கன்றின் பக்கலில் போனது
அச்சம் ஒருபுறம், பாசம் மறுபுறமாக
அகலாது அணுகாது அக்கினியில்
காய்வார் போல,
அன்னைப்பசு ஓடிப்போய் அப்பாலே நின்றது,
கல்லுக்குள்ளே ஈரம்: கருணை எனும் இரக்கம்
தூய்மையே உருவான துறவியின் நிலை
வாய்மையே வடிவான தாய்மையின் இயக்கம்
படிபடியென்று பலவாறு படித்த மாந்தருக்கும்
பசிவந்திட்டால் பத்தும் பறந்து போகும்
கல்வி, கேள்வி ஏதுமறியாக் காட்டு வேங்கை,
காட்டுகின்ற பரிவு, காத்துநிற்கும் பொறுப்பு
உணர்வு முழுதும் விடியும் வரை
உலகிற்கு அன்றே வந்த
உயிரைக்காக்கும் ஒரு வெறி- மறுபுறம் தன்
உடலினை வாட்டி நின்ற கொடும்பசி
காட்டுவிலங்கும் தான் காட்டி நின்றது
அன்னை என்பது மானுடம் அல்ல
உன்னதமான ஓர் ஒளிப்பதிவு:
உண்மையான ஒரு நிகழ்வு.

வாணியழகன், முரசுமோட்டை

# தாய் உள்ளம்



பத்து மாதம் சுமந்து பெற்றிடுவாயே
பாலூட்டி சீராட்டி வளர்த்திடுவாயே
இரவு பகல் தூக்கமின்றி கண் விழித்திடுவாயே
ஈன்ற பெருமையை சொல்லி மகிழ்ந்திடுவாயே

அறுசுவை உணவோடு அறிவை ஊட்டிடுவாயே
அறியாமல் செய்யும் தவறை அன்போடு கண்டிப்பாயே
பள்ளி செல்லும் போது பணிவிடை செய்திடுவாயே

பரீட்சையில் சித்தியடைய எனக்காக வேண்டிடுவாயே
சீரான வாழ்க்கைக்காக அல்லும் பகலும் உழைத்திடுவாயே
பிறர் வார்த்தை கேட்டு உள்ளம் பூரித்திடுவாயே
நல்ல பிள்ளையாய் வளர நாளும் வேண்டிடுவாயே

ஊரார் தன் பிள்ளையை சான்றோன் என கூறும் போது
சற்றும் சளைக்காது கண்கலங்கி நின்றிடுவாயே
கால நீரோட்டத்தில் பற்பல கனவுகள் கண்டிடுவாயே
கண்ணை இமை காப்பது போல் காலமெல்லாம் காத்திடுவாயே

எஸ்.பி. தனா, தெல்லிப்பழை

# வாழவழி இருக்குதல்லோ

அம்மா அன்னை தாய் மாதா அழைப்பதற்கு எத்தனை பெயர்
அன்பு கருணைக்கு ஆதாரம் கோவில் கருவறைக்குள் உயிரிலா
சொருபம் உன் கருவறையில் உயிர் காவும் சிசுவை பத்து மாதம்
பக்குவமாய் பாதுகாத்த அடைப்பொறியர்
அன்னையர்க்கு இன்று தினமாமோ

தாயிற் சிறந்த கோவிலுமில்லை கோயில் கிணற்றுக்குள் மூன்று
குருத்துகளை மூச்சுத்திணற வைத்து முடிவு
கட்டிப் போனாளே என்றே முகம் சுழிக்கும் சமூகத்திற்கும் சில
பொறுப்பு இருக்கு வேடிக்கை பாராது
பங்காளராகப் பதமாக ஓரிரு வார்த்தையாய் உதவியிருக்கலாமே

தான் சமூகம் இயற்கை எனும் வாழ்க்கைத்
தத்துவத்தை தெரியாதது
ஏனோ மனச் சஞ்சலத்தைப் போக்குதற்கு
ஔதடமாய் அரசு சார்பற்ற இப்பெரும் நிறுவனங்களின்
விழிப்பு நிலை போதாது விளங்க வைத்து
வாழ்வென்றால் சிக்கல் உளதுதானே
சீர்செய்தே வாழ வழி இருக்குதல்லோ.

வை.க.தவமணிதாசன்

## மௌனத்தின் தேடல்- 539



## முதியோரும் பாதுகாவலரே!

கலிகால துன்பங்கள் பலி கொண்ட போர் எச்சங்கள்
கிலி பிடித்த குடிமக்கள், மலிந்து விட்ட அவலங்கள்
பொலிவிழந்த குடும்பங்கள், வலிமை இழந்த விவசாயிகள்
நலிவுறும் அகதிகள் முகாம்கள் என யதார்த்த உலகின்
பாதுகாவலர்கள் எங்கே? அநாதைச் சிறுமியின்
ஏக்கம் தவிர்க்கும் பாதுகாவலராகிய
முதிய பெற்றோரின் நிதர்சனக் காட்சி!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்.

## இது இல்லாததாலோ

அன்பும் அரவணைப்பும்
அனுபவப் பகிர்வும் பண்படுத்தலும்
நல்ல தாத்தா பாட்டியிடம்
சிறு பிள்ளைகள் பெறும் அருங்கொடைகள்
அது இன்று அருகிப் போனதாலோ
கொலை, கொள்ளை, கொடூரம்
நிதம் நடக்கின்றன

சி.இ.அன்புதுரை
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## குழந்தையுடன் களிப்பு

பாட்டனும் பாட்டியும்- தம் மடியினில் பாசத்துடன்
மழலையின் கரம் பற்றியே அன்பிற்கு ஈடாக
அறிவுக் கதைகளையா? அரவணைப்பில்
சொரிகின்றனரோ!

தங்கத்தமிழன்,
காரைநகர்.

## முற்றத்திலே...

முற்றத்திலே புலுணிப் பறவை
தத்தித் தத்தி வருவதில்லை அதன்
உற்ற உறவாய் அணிலும் சேர
உள்ளம் கவரும் காட்சி இல்லை
வற்றும் காலம் கொண்டு சென்று
வலுக்கட்டாயமாய் முதியோர்
இல்லம் விட்டு வரும் வேதனைக்கு
இது ஔடதமாய் உலகுதிக்கு ஆகும்

வைகதன், கொக்குவில்.

## குதூகலம்

மழலை மொழியும் அரவணைப்பும்
தடுக்கிவிழும் நடையும்
செல்லச்சிரிப்பும் கண்டு
கட்டியணைத்து கொஞ்சி மகிழ்ந்து
விளையாட்டுக்காட்டி சோறூட்டி
கை பிடித்து அன்னநடை பழக்கி
தாலாட்டுப்பாடி தூங்க வைத்து
மனம் மகிழும் தாத்தா பாட்டி
கொடுத்து வைத்தவர்கள்
எத்தனையோ தாத்தா பாட்டி
முதியோர் இல்லத்தில் உறவுகளின்றி
நினைவுகளோ வேதனையாய் தூக்கமின்றி
வாழ்நாள் எண்ணுகின்றார் பாவிகளாய்

ம.திருவரததாசா,
மில்வத்தி, வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 540



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## மழைக்கு முளைத்த...

மழைக்கு முளைத்த காளான்களாய்
மண்ணில் முளைத்த முதியோர்
இல்லம் காணக்காண நெஞ்சு வலிக்கும் மானுடமோ இலவோ
என்றே மனதை ஆற்றும் இந்தப் படத்தை மருந்தாய்
போற்றி வாழ்வு சமைப்போம்...

த.சிவகாமி, நல்லூர்

## தாத்தா பாட்டி

தாத்தா பாட்டி கதைகேட்டு தழுவும் கரமும் கருணை பாட்டு
ஆத்தா அப்பன் துணையினோடு அகமே மகிழும் பேரன் பேத்தி
பரம்பரையின் ஊட்டம்தானே உலகில் வேறு செல்வம் ஏனோ


கார்வண்ணன், காவலூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**“சிலிண்டரில் சிகரெட் பற்றியவன் செத்துப் போனானோ அல்லது இஞ்சனேக்கதான் கிடக்கிறானோ...” நடுத்தர வயதுப் பெண்ணொருத்தி நாலா பக்கமும் கொண் டையைத் திருப்பி, கொதி கேத்தல் போலப் பார்வையால் புகைத்தாள்.**

## வலி சொல்லும் தொடர்... 10


ஜூனியர் விகடன்

அலைச்சத்தம் இன்னமும் தலைக்குள் கேட்டபடியிருந்தது. கைகளில் பிடித்திருந்த நீல பேரலை எழுந்து தேடினான் நீதன். சாதுவாக சரிந்து, பகலைப் பார்த்தான். முதலில் மிரண்டான். முதல்நாள் இரவே சாவதற்கு ஒப்புக்கொடுத்த தனது உடல் இன்னமும் உயிரோடிருப்பதாக உணர்ந்தபோது பயந்தான். கடலை எட்டிப் பார்த்தான். அது பரிவோடு படகுக்கு வழிவிட்டபடி, நீலமாகப் படர்ந்திருந்தது. இயந்திர சத்தத்துக்குப் போட்டியாக அலைகளின் ஒலிகள் படகின் அடியில் கேட்டபடியிருந்தன.

முதல்நாள் முறிந்து மூழ்கிய படகைவிட, இது சற்று விசாலமானதாகத் தெரிந்தது. பழைய கப்பலில் பார்த்த சில முகங்கள், அரைத்தூக்கத்தில் அருட்டியபடியிருந்தன. தோய்ந்த ஆடைகளும் கொஞ்ச உயிரும் அவர்களில் ஒட்டியிருந்தன.

நீதன் எழுந்துவிட்டதைக் கண்ட ஒருவன், படகின் மேல் தளத்திலிருந்து தேநீரோடு ஓடி வந்தான். அப்போதுதான், அடுத்த பக்கத்தில் குயிலனும் மனைவியும் அருகருகாகக் கிடந்ததைக் கண்டான். நீதனுக்கு அதுவரை கடலுக்குள் கிடந்த மூச்சு, சாதுவாக உடலுக்குள் சுரந்தது. எழுந்து அவர்களிடம் போனான்.

“குயிலன்” குரல் கேட்டவுடன், குயிலனின் முகமெல்லாம் விகாரமாய் மாறியது. வார்த்தைகளைக் கோர்த்துவிட முடியாமல் உதடுகள் நடுங்கின. அடிநெஞ்சில் வெடித்த ஓலத்தோடு எழுந்தோடி வந்து நீதனில் விழுந்தான்.

“அண்ணே, குழந்தை தவறிப் போச்சுது அண்ணே” மார்பிலும் தலையிலும் அடித்துக் குளறினான். குயிலனின் மனைவி கூடவே “என்ர ஐயோ” - என்று ஓலமிட்டபடி தரையில் தலையை இடித்தாள். நீதனுக்கு தலைக்குள் சிலிண்டர் வெடித்தது போலிருந்தது. நிற்க முடியாமல் படகின் தரையில் குத்தென விழுந்தான்.

மேல் தளத்திலிருந்தவர்கள் ஓடிவந்தார்கள். மீதிப் பேர் மேலிருந்தவாறே எட்டிப் பார்த்தார்கள். “என்ர குழந்தையைக் கொண்டு போட்டுதே” நாசமாப் போன இந்தக் கடல் பயணம் வேண்டாம், வேண்டாம் எண்டு அம்மா அப்பவும் சொன்னாவே. என்ர ஐயோ...”

இரண்டு பெண்கள், குயிலனின் மனைவியைக் கைத்தாங்கலாகப் பிடித்திருந்தார்கள். அழுவதற்கே வலுவில்லாத குயிலன், ஆறுதல் சொல்லத் தெம்பில்லாமல், மனைவியைத் தன் மீது சாய்த்தான்.

“இனி நான் ஏன் உயிரோடு கிடக்கிறன்... ஐயோ... பாத்துக்கொண்டு நிக்கிறீங்களே, யாராவது குதிச்சு என்ர பிள்ளைய எடுத்துக்கொண்டு வாங்கோவன்” முகத்தின் முன்பாக விழுந்த முடி அவள் கண்ணீரோடு ஒட்டிக் கிடந்தது. கண்கள் சிவந்து, கைகள் முழுவதும் சிராய்ப்பு காயங்களும் தெரிந்தன.

நீதனுக்கு முன்னால், தரையில் அனீஸா நிறைமாத வயிற்றோடு அடித்தடித்து குளறிக் கொண்டிருந்தாள். பிறந்த நாளுக்கு தான் வாங்கிக் கொடுத்த லியோவின் புலிப்பொம்மையை அவள் கைகளில் இறுக்கிப் பிடித்திருக்கிறாள்.

அழுவதை நிறுத்திவிட்டு ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தாள். அனீஸாவின் கண்களில் சிவந்த ரேகைகள் வலை வலையாகத் தெரிந்தன. “டேய்” என்று நீதனை நோக்கிப் பாய்ந்தாள்.

பின்பக்கமாக எழுந்து விழுந்த நீதன், படகின் ஓரமாக மரப்பலகையில் தலையடிபட்டுக்கொண்டான். அங்கிருந்தவர்கள் ஓடிச்சென்று பிடித்தார்கள். பலப்பணமாமீராகப் போனது. படகிலிருந்தவர்கள் ஒவ்வொருவராகக் கீழ்த் தளத்துக்கு வந்து குயிலனுக்கும் மனைவிக்கும் ஆறுதல் சொன்னார்கள்.

அது இன்னமும் பெருங்கொடூரமாகக் கழிந்தது. படகு கவிழ்ந்த புதினத்தைக் கேட்டறிவதற்கு, படகின் கீழ்த் தளத்துக்கு வந்த சில பெண்கள், குயிலனின் மனைவிக்கு ஆறுதல் சொல்லும் சாக்கில், அங்கேயே குந்தியிருந்தனர்.

“சிலிண்டரில் சிகரெட் பற்றிய நாய் விழுவான் செத்துப்போனானோ அல்லது இஞ்சனேக்கதான் கிடக்கிறானோ...” நடுத்தர வயதுப் பெண்ணொருத்தி நாலா பக்கமும் கொண்டையைத் திருப்பி, கொதி கேத்தல் போலப் பார்வையால் புகைத்தாள்.

“உனக்கு பிஞ்சு உடம்பு பிள்ளை, கவலையை மண்டைக்குள்ள போடாத... அடுத்த குழந்தையும் ஆம்பிளையாத்தான் வருவான்” ஆறுதல் சொல்ல வந்தவர்களின் பேச்சு, நேரம் போகப்போக அங்கு அசட்டுக் கதைகளாக மாறிக்கொண்டிருந்தன.

இரவு நெருங்கும்போது கடல் மீண்டும் மிரட்டத் தொடங்கியது. முதல்நாள் நினைவுகள் நீதனுக்கு வானில் பெரும்பூதமாக எழுந்து நிற்பதுபோல தெரிந்தன. நட்சத்திரங்கள் அச்சத்தைத் தந்தன. சுருக்குப் போடுவதற்கு கழுத்தை நோக்கி எறியப்பட்ட வடக்கயிறு போல, படகைச் சுற்றி அலைகள் வளைய வளைய வந்து விழுந்து கொண்டிருந்தன. படகின் ஒவ்வோர் அசைவும், அது கடல் வாயில் அமிழ்வது போல நீதன் உணர்ந்தான்.

வெயில் கரைந்து, சாதுவான இருட்டு வானில் தெரிய ஆரம்பித்தவுடன், படகில் பல மூலைகளிலும் சீட்டாடத் தொடங்கினார்கள். பெண்களுக்குப் பேச்சு மாத்திரமே போதுமாயிருந்தது. ஆண்களுக்குப் பொழுதைப் போக்க, படகு போதுமாகை இருக்கவில்லை. ஆட்கள் அதிகம் புழங்காத இடங்களைத் தேடிப்பிடித்து அங்கு ஒதுங்கிக் கொள்ளும் சோடிகளுக்கும் அந்தப் படகில் சில அத்தியாவசியத் தேவைகள் இருந்து கொண்டிருந்தன.

“கப்பல் காதல், கருவாடு மாதிரி, நாறிப்போயிடும்! மச்சான் தெரியும் தானே” தங்களுக்குள் பேசுவதைப் போல, படகின் பின் அணியப் பக்கமாக பர்மா பெண்ணொருத்தியுடன் தனியாக ஒதுங்கிய யாழ்ப்பாணத்து பெடியனுக்கு, படகின் மேல் தளத்திலிருந்தவர்கள் பூடகமாக “ அதே வேளையில் எரிச்சலோடு - வாக்கு சொன்னார்கள் சிலர்.

இரவு நெருங்கியபோது, படகின் மேல் தளத்தில் படுத்திருந்தவர்களில் ஒருவர் வானொலி வைத்திருந்த பெடியனைப் பார்த்து.. “ஒஸ்ரேலியா தமிழ் ரேடியோ ஏதாவது கேக்குதோ எண்டு ஸ்டேசனை உருட்டிப் பாராடா, கிட்ட வந்திட்டமெண்டால் கண்டுபிடிக்கலாம்.”


படகில் தங்களை அதிமேதாவிகளாக எண்ணிக்கொண்ட பலரில் இந்தக் கேள்வியைக் கேட்டவரும் ஒருவர். கண்களை மூடிக் கொண்டு படுத்திருந்த நீதனுக்கு இந்த உரையாடல் தெளிவாகக் கேட்டது.

(அடுத்த வாரம் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல் புறா!




கண்டு வியந்தானா! அஞ்சினானா! அவனுக்கே புரியவில்லை அவன் உணர்ச்சி! புரவிகள் இருப்பதை விட்டுப் பின்தொடரும் படையை எப்படி மடக்க முடியும் என்று ஆரம்பத்தில் சந்தேகித்த இளையபல்லவன், அந்தப் புரவிகளின் வேகத்தாலும் முரட்டுத்தனத்தாலும் நிகழ்ந்த சேதத்தைக் கண்டு வியக்கவே செய்தான். அந்த வியப்பில் ஒரு வருத்தமும் எழுந்தது அவன் உள்ளத்தில்.

தானும் மெள்ளப் போரிட்டுக் கொண்டு பின்னால் வந்துவிட்டாலும் தான் தப்பும் மார்க்கத்தை அந்தப் புரவிகள் அடியோடு அடைத்து விட்டதை எண்ணி வருந்தினான். பின்னால் சென்றால் அரபுப் புரவிகள் மிதித்து விடும். முன்னால் சென்றால் வீரர்கள் அழித்து விடுவார்கள். எப்படியும் மரணம் நிச்சயம் என்ற முடிவுக்கு வந்த இளையபல்லவனின் இதயத்தில் சந்துஷ்டியும் நிலவியது.

"எப்படியும் அநபாயனும் காஞ்சனா தேவியும் தப்பி விட்டார்கள். இது பெரும் சாதனை. என் சாதனை" என்று தன்னைப் பாராட்டிக் கொண்டு மரணத்தை வரவேற்க வெறியுடன் போரிட முற்பட்டு, தன் வாளை வெகு வேகமாகச் சுழற்றி முன்னேறி, சுற்றிலும் சூழ்ந்து வந்த வீரர் கூட்டத்தில் புகுந்தான்.

அந்தத் தருணத்தில் மரணமும் அவனை வரவேற்க முற்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் பின்புறம் முரட்டு அரபு நாட்டுப் புரவிகள் நான்கு அவனை நோக்கி ஏன் பாய்ந்து வர வேண்டும்? அவை மட்டுமா பாய்ந்து வந்தன? இல்லை, இல்லை. பீமன் சற்றுத் தூரத்திலிருந்து இம்மி பிசகாமல் குறிவைத்து எறிந்த வேலொன்றும் அவன் கழுத்தை நோக்கிப் பறந்து வந்தது.

## பிரிவா, முடிவா?

தூரத்தே புரண்டு புரண்டு வந்து தரையில் மோதிய கடலலைகளை விடப் பெரும் கனைப்புகளுடனும் வேகத்துடனும் தன்னைப் பின்புறத்தில் மோதப் பாய்ந்து வந்த முரட்டு அரபுப் புரவிகளைப் பார்க்கச் சற்றுக் கண்ணைப் பின்புறம் திருப்பிய இளையபல்லவன், முன்புற எச்சரிக்கையை இழந்தது அரை விநாடியே என்றாலும், அந்த அரை விநாடிக்குள் வெகு லாகவமாக குறிவைத்துப் பீமன் எறிந்த பெரும் வேல் அவன் கழுத்தை மின்னல் போல் தடவி உராய்ந்து தோலையும் ஓரளவு உரித்துச் சென்றதால் மற்றக் காயங்களை விட அந்தக் காயத்திலிருந்து குருதி பலமாகப் பிரவாகிக்கத் தொடங்கியது.

வேலெறிவதில் குறி தவறாதவன் எனப் பிரசித்தமுடைய தென் கலிங்கத்துப் பீமனின் வேல் அன்றும் குறி தவறாமல் இளையபல்லவன் கழுத்தை ஊடுருவத்தான் வந்ததென்றாலும், சோழர் படைத் தலைவன் தலை விதியும் கலிங்கத்தின் பிற்காலக் கதியும் அவன் உயிரை மயிரிழையில் காக்கவே செய்தன.

இளையபல்லவன் போராட்டத்திலேயே இருந்திருந்தால் அந்த வேலே அவனை மாய்த்திருக் கும். ஆனால் திடீரெனப் பின்புறத்தில் புரவிகளின் சத்தத்தைக் கேட்டுத் திரும்பி விட்டதாலும் மீண்டும் அவன் கழுத்தைத் திருப்பி எதிரிகளை நோக்கு முன்பு வெகு வேகத்துடன் புரவியொன்றும் அவனை முட்டியதால் அவன் உடல் சிறிது நகர்ந்துவிட்டதாலும் பீமனின் வேல் அவன் உயிரை உறிஞ்ச சக்தியற்றதாயிற்று.

இருப்பிலும் அவன் வேலைவிடப் பயங்கரமாகப் பாய்ந்து வந்தன பின்புறத்தில் அரபுப் புரவிகள். எதிரிகள் மீண்டும் அவனைச் சுற்றி வளைத்துத் தாக்கினார்கள். மனித வாழ்க்கையில் சில சந்தர்ப்பங்களில் அபாயமே பெரும் உதவியாக மாறத்தான் செய்கிறது. இளையபல்லவன் அந்தச் சமயத்திலிருந்த அபாய நிலையில் பின்னால் வந்த புரவிகள் விளைவித்த அபாயம் ஓரளவு நன்மையே விளைவித்தது.

கலிங்க வீரர்களுக்கும் இளையபல்லவனுக்கும் எந்தவித வித்தியாசத்தையும் எட்டாத அந்த முரட்டுப் புரவிகள் இளைய பல்லவனை மட்டுமின்றி அவனைச் சூழ்ந்து வந்த கலிங்க வீரர் மீதும் பாய்ந்ததால் வீரர் படை அவனைச் சூழ முடியாமல் பின்னடையவே நாற்புறத்திலும் சுழன்று போரிட அவசியமில்லாமல் எதிரிகளை நேர் முகமாகவே வாளால் தடுத்தும் வீழ்த்தியும் போரிட்டான் சோழர் படைத் தலைவன். அந்தப் போரும் சில விநாடிகளே நிகழ்ந்தன. புரவிகளின் பாய்ச்சலுக்கும் கடிக்கும் உதைக்கும் அஞ்சிய கலிங்கக் காவல் வீரர்கள் சில அடிகள் பின்வாங்கியது இளையபல்லவனுக்கு ஓரளவு சௌகரியமாயிருந்தாலும் அவன் அந்தச் சமயத்தில் மரண வேதனையைப் பரிபூரணமாக அனுபவித்தான்.

புரவிகள் அவனைச் சில சமயம் உராய்ந்து சென்றபோது, ஏற்கனவே பல காயங்களிலிருந்து இரத்தம் பெருகிய தால் சோகப்பட்டிருந்த அவன் உடல் தள்ளாடியது. புரவிகள் கடல் மணலைப் பின்புறக் காலால் வாரி வாரியடித்ததால் மணலிலிருந்த சிறுசிறு கற்கள் சுள்சுள்ளென்று அவன் தேகத்தில் பல இடங்களிலும் தாக்கின.

வீசப்பட்ட மணல் அங்கியணிந்த பாகங்களைப் பாதிக்காவிட்டாலும் குருதி பாய்ந்த கழுத்தின் பின்புறத்திலும் சதை பிய்ந்த பக்கப் பகுதிகளிலும் தாக்கி, பதிந்து, மிகுந்த எரிச்சலையும் சொல்லவொண்ணா வேதனையையும் விளைவித்தன.

திடீர் திடீரெனக் கிடைத்த இரண்டொரு உதைகள் அயராத அவன் கால்களையும் அயர வைத்தன. இத்தனையையும் சமாளித்துக் கொண்டு எதிரிகளைத் தேக்கி நின்ற இளையபல்லவன், காவல் வீரர்களில் சிலர் மாண்டு விட்டாலும் அவருக்குப் பின்புறத்திலிருந்து மீண்டும் இருபது முப்பது புரவிப் படை வீரர்கள் உதவிக்கு வருவதைக் கவனித்தான். துவண்ட தன் கால்களையும் சற்றே மயக்கம் வந்து கொண்டிருந்த தனது நிலையையும் எண்ணினான்.

தனக்கு முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிறதென்பதைச் சந்தேகமற உணர்ந்தான். மரண உணர்ச்சி மனிதனுக்கு எப்பொழுதும் எதிர்பாராத பலத்தையும் வேகத்தையும் அளிக்கும் தன்மை வாய்ந்ததால், மரணத்தை எதிர்நோக்கி நின்ற அந்தச் சமயத்தில் இளையபல்லவனுக்கு இணையற்ற பலத்தையும் அளித்தது. அதைத்தவிர அந்தச்சமயத்தில் புரவி வீரர் அணிமுகப்பில் தன் எதிரே இராட்சதன் போல் வந்து விட்ட பீமன், "வெட்டிப் போடுங்கள் அவனை. உங்களில் நால்வர் சுங்கச் சாவடிப் பக்கம் போய்ச் சங்கமக் கரையோரமாகப் போய் அந்த வண்டியைத் தடை செய்யுங்கள்" என்று உத்தரவிட்டதையும் அந்த உத்தரவைத் தொடர்ந்து அவனுக்குப் பின்புறமிருந்த வீரர் சிலர் புரவிகளின் இடையூறு இல்லாத பக்கமாகச் சுங்கச் சாவடியை நோக்கி விரைந்ததையும் கவனித்த இளையபல்லவன், வெகு சீக்கிரம் அமீரின் வண்டியையும் ஆபத்து சூழ்ந்துவிடும் என்பதை உணர்ந்து கொண்டானாகையால் வாளால் எதிரிகளைத் தாக்கிக் கொண்டு பின்புறம் திரும்பி வண்டியை நோக்கினான்.

அடுத்த விநாடி பின்புறம் பாய்ந்த முரட்டுப் புரவியொன்று மோதித் தள்ள அவன் நிலத்தில் உருண்டான். அவன் தலையில் இருமுறை இரு குளம்புகள் சட்சட்டென்று தாக்கின. அத்துடன் அவன் நினைவிழந்தான். வேறுபல புரவிகள் அவன் மீது பாய்ந்து சென்றன.

புரவிகளின் அந்தத் தாக்குதலில் அந்த வீரனின் உடல் மணலில் புரண்டதைக் கண்ட பீமன், இனி அவனைக் கவனிக்கத் தேவையில்லையென்ற காரணத்தாலும், தாறுமாறாகப் படையைத் தேக்கும் புரவிகளோடு போரிடுவது அவசியமில்லை என்ற காரணத்தாலும், வண்டியை மடக்க ஏற்பாடு செய்து அநபாயன் முதலியவர்களைப் பிடிப்பதே அடுத்தபடி செய்ய வேண்டிய வேலை என்ற உத்தேசத்தாலும் தன் வீரர்களைப் பக்கவாட்டில் திரும்பச் சொல்லி அவர்களுடன் சுங்கச் சாவடிப் பாதையில் வெகு துரிதமாகச் சென்றான்.


அப்படிச் சென்று கொண்டிருந்த சமயத்தில் அமீரின் வண்டி எங்கிருக்கிறதென்பதைக் கவனிக்க நீர்க் கரையருகே கண்களை ஓட்டினான். புரவிகள் எழுப்பிய மணல் தூசியும் இடையே போடப்பட்ட கப்பிச் சாலையிலிருந்து கிளம்பிய செம்மண் தூசியும் கடற்கரைப் பிராந்தியத்தில் மண்டிக் கிடந்ததால் வண்டி இருந்த இடம் கண்ணுக்குத் தெரியவில்லை கலிங்கத்து அதிபனுக்கு. அந்தத் தூசி மட்டும் மறைக்கவில்லை அமீரின் வண்டியை.

அந்த வண்டிக்கு முன் ஓடிய வண்டிகளும் கிழக்குக் கோட்டை வாசலில் நிகழ்ந்த சண்டையால் 'பயந்த பணியாட்கள் தாறுமாறாக ஓடியதும் கடற்கரையில் கலவரத்தைத் தடுப்பதற்காகவே நிறுத்தப்பட்டிருந்த சுங்கக் காவல் வீரர் நீர்க் கரையை அடைக்க விரைந்ததால் ஏற்பட்ட கூட்டமும்கூட வண்டி கண்ணுக்குப் புலப்படாததற்குக் காரணமாயின. புலப்படாத அந்த வண்டியைத் தேக்கும் காரணத்துடன் வெகு வேகமாகச் சுங்கச் சாவடியை அடைந்த பீமன், அங்குள்ள காவல் வீரர்களை நீர்க்குடம் ஏற்றிச் செல்லும் சகல வண்டிகளையும் மறிக்குமாறு உத்தரவிட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சுலர் திரைவிமர்சனம்




பேச்சிலராக இருக்கும் ஜி.வி. பிரகாஷ் நாயகி திவ்யா பாரதியை சந்திக்கும் பொழுது இருவருக்கும் திடீரென ஒரு மாற்றம் ஏற்படுகிறது. பின் ஹீரோ சென்னையில் இருந்து பெங்களூருக்கு வேலைக்காக செல்கிறார் ஜி.வி. பிரகாஷ். அங்கு இருவரும் ஒரே ஆபீசில் வேலை செய்கிறார்கள்.

தன் நெருங்கிய நண்பரின் உதவியுடன் திவ்யா பாரதியுடன் ஒரே வீட்டில் தங்க முயற்சி செய்கிறார் ஜிவி பிரகாஷ். ஒரே ஆபீசில் வேலை செய்வதாலும், தன் நண்பரின் சிபாரிசலும் ஜிவி பிரகாஷ்சுடன் தங்க ஓகே சொல்கிறார் திவ்யா பாரதி.

ஒரே வீட்டில் வசித்து வரும் இவர்கள், காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். ஒரு கட்டத்தில் இருவரும் எல்லை மீறுகிறார்கள். அதன்பின் இருவருக்கும் பிரச்சனைகள் ஏற்படுகிறது. இவர்களுடைய நெருக்கமே பிரிவுக்கு காரணமாக அமைகிறது. இறுதியில் இருவரும் ஒன்று சேர்ந்தார்களா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

தமிழ் சினிமா உலகில் பல உண்மை சம்பவங்களை மையமாக வைத்து திரைப்படம் உருவாகி வருகிறது. அந்த வரிசையில் பேச்சிலர். தன்னை சுற்றி எது நடந்தாலும் சரி, தன்னால் மற்றவர்களுக்கு எது நடந்தாலும் சரி கொஞ்சம் கூட கவலைப்படாத கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் ஜிவி பிரகாஷ். இவருடைய அலட்டல் இல்லாத நடிப்பு ஓரளவிற்கு ரசிக்க வைக்கிறது ஜிவி பிரகாஷ்.

அறிமுக கதாநாயகி திவ்யா பாரதி, முதல் படத்திலேயே தன்னுடைய சிறந்த நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார். மற்ற கதாபாத்திரங்கள் தங்களுக்கு கொடுத்த கதாபாத்திரத்தை கச்சிதமாக செய்திருக்கிறார்கள். ஜிவி பிரகாஷ் தன் நண்பர்களுடன் வரும் காட்சிகள் எல்லாம் அற்புதமாக இருக்கிறது.

அறிமுக இயக்குனர் சக்தி செல்வகுமார் பேச்சிலரின் வாழ்க்கையை சொல்ல முயற்சி செய்திருக்கிறார்.

கதைக்கு ஏற்றார்போல் கதாபாத்திரங்களையும் அருமையாக தேர்ந்தெடுத்து இருப்பது படத்திற்கு பக்க பலமாக இருக்கிறது. ஆனால், திரைக்கதையின் நீளம் படத்திற்கு பலவீனமாக அமைந்து இருக்கிறது.

தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்திருக்கிறது. ஜி.வி.பிரகாஷின் இசையை ஓரளவிற்கு ரசிக்க முடிகிறது.

மொத்தத்தில் 'பேச்சிலர்' பார்க்கலாம்.

# சர்வதேச விருதுகள் பெற்றுவரும் "வதுவை" ஈழத்து குறுந்திரைப்படம்

கிளிநொச்சி தருமபுரதத்தைச் சேர்ந்த "லிப்ஷிஜா மகேந்திரம்" எழுதி இயக்கியுள்ள வதுவை குறுந்திரைப்படம் பல விருதுகளைப் பெற்றுள்ளது.

இக் குறும்படமானது இந்தியாவின் தமிழ்நாட்டில் " கடந்த ஒக்டோபர் மாதம் 18ஆம் திகதி நடைபெற்ற Aiyan film Awards" என்ற திரைப்பட விழாவில் "சிறந்த அறிமுக இயக்குநர்" விருதைப்பெற்றதோடு, ஒக்டோபர் மாதம் 27ஆம் திகதி நடைப்பெற்ற "Philippines Independent Film Festival" லில் "பெண்கள் குறும்படத்தில் சிறந்த படம்" என்ற விருதினை பெற்றதோடு, நவம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற "Singapore independent Film Festival" லில் "சிறந்த சமூக 'விழிப்புணர்வு குறும்படம்" என்ற விருதினையும் பெற்றுக் கொண்டது.

மறுதிருமணம் என்று கூறும் போதே அனைவரினதும் எண்ணங்களில் வித்தியாசமான கண்ணோட்டமே தெரிகிறது. அதில் பெண் என்பவள் பங்கெடுப்பாள் எனில் அவளுக்கு வினோதமான பட்டப் பெயர்கள் சூட்டப்பட்டுவிடும். நாட்டில் ஏற்பட்ட யுத்தகலவரத்தின் பின்னர் கிட்டத்தட்ட 80ஆயிரம் பெண்கள் வடக்கு மாகாணத்தில் மட்டும் விதவைகளாக காணப்படுகின்றனர். அப்படிப்பட்ட பெண்களில் ஒருவர் தான் இக் குறும்படத்தில் பிரதான கதாப்பாத்திரமாக வரும் கவிதா. இவர் யுத்தகாலப்பகுதியில் கணவனை இழந்து ஒரு பெண் குழந்தையோடு ஒரு கிராமத்தில் வசித்து வருகின்றார்.




கவிதாவின் வாழ்க்கை அவரின் பெற்றோரோடே கடந்து செல்கின்றது. இந்த சூழ்நிலையில் கவிதா தன்னுடைய தனிப்பட்ட தைரியத்துடன் ரமேஸ் என்ற இளைஞனை இரண்டாம் தரம் காதலித்து திருமணம் செய்ய தீர்மானிக்கின்றார். அத்தருணத்தில் கவிதா தன் குடும்பத்தாலும் சமூகத்தாலும் எதிர் நோக்கும் சவால்களையும், அச் சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுக்கின்றார். என்பதை இக் குறும்படத்தில் விஸ்தரித்து காட்டப்பட்டுள்ளது.

# பீஸ்ட் படத்தின் நூறாவது நாள் சூட்டிங்



நடிகர் விஜய் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'மாஸ்டர்' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. வசூலையும் வாரி குவித்தது. இதனை தொடர்ந்து நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் பீஸ்ட் படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்திற்கு ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

'கோலமாவு கோகிலா' படத்தை இயக்கிய நெல்சன் திலீப்குமார் சிவகார்த்திகேயனை வைத்து 'டாக்டர்' படத்தை இயக்கினார். அந்தப் படமும் வெற்றி பெற்றது. இதனால் விஜய் நடிக்கும் பீஸ்ட் படத்திற்கு எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் படத்தின் நூறாவது நாள் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றை நெல்சன் திலீப்குமார் வெளியிட்டு இருக்கிறார். அந்த புகைப்படம் இணையத்தில் படுவேகமாக பரவி வருகிறது.

அந்த புகைப்படத்தில் இருக்கும் அபர்ணா அவர்கள் விஜய்க்கு தங்கையாக நடிக்கிறார்.

இவர் மலையாளத் தில் ஒரு சில படங்களில் நடித்திருக்கிறார். மேலும் பூஜா ஹெக்டே, செல்வராகவன், யோகி பாபு உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பாவ மன்னிப்பு
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன்



ம்ம்ம் ம்ம்ம் ஓஹோ ஓஓ
வந்த நாள் முதல் இந்த நாள் வரை
வந்த நாள் முதல் இந்த நாள் வரை
வானம் மாறவில்லை
வான் மதியும் மீனும் கடல் காற்றும்
மலரும் மண்ணும் கொடியும் சோலையும்
நதியும் மாறவில்லை
மனிதன் மாறிவிட்டான்

நிலை மாறினால் குணம் மாறுவான்
பொய் நீதியும் நேர்மையும் பேசுவான்
தினம் ஜாதியும் பேதமும் கூறுவான்
அது வேதன் விதி என்றோதுவான்
மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்

பறவையை கண்டான் விமானம் படைத்தான்
பறவையை கண்டான் விமானம் படைத்தான்
பாயும் மீன்களில் படகினை கண்டான்
எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான்
எதனை கண்டான் பணம் தனை படைத்தான்
எதனை கண்டான் பணம் தனை படைத்தான்
மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்

ஓ ஓ ஓ ஹோ
ஆ ஓயே ஓ ஓ ஓ ஹோ
ஆ ஓயே

இன்பமும் காதலும் இயற்கையின் நீதி
ஏற்ற தாழ்வுகள் மனிதனின் ஜாதி
பாரில் இயற்கை படைத்ததை எல்லாம்
பாவி மனிதன் பிரித்து வைத்தானே
மனிதன் மாறிவிட்டான் மதத்தில் ஏறிவிட்டான்

வந்த நாள் முதல் இந்த நாள் வரை
வானம் மாறவில்லை
வான் மதியும் மீனும் கடல் காற்றும்
மலரும் மண்ணும் கொடியும் சோலையும்
நதியும் மாறவில்லை
மனிதன் மாறிவிட்டான்

ஓ ஓ ஓ ஹோ
ஆ ஓயே ஓ ஓ ஓ ஹோ
ஆ ஓயே ஓ ஓ ஹோ
ஆ ஓயே ஓஹோ ஓ

# சீனாவின் கடன் பொறிக்குள் சிக்கி விட்டதா இலங்கை

தூரத்து தண்ணீர் ஒரு போதும் ஆபத்துக்கு உதவாது என்பது சீனாவின் விடயத்தில் இலங்கை கற்றுணரும் காலம் வந்து விட்டது.

இலங்கையின் ஆட்சியாளர்களையும் அங்கு வாழும் மக்களையும் ஒரு மாபெரும் கடன் பொறிக்குள் வீழ்த்தி அதிலிருந்து பொருளாதார ரீதியாக எளிதில் மீள முடியாதவாறு செய்வதே அதன் சூழ்ச்சித் திட்டமாகும். அதில் சீனா ஓரளவு வெற்றியும் பெற்று விட்டது.

இதை இலங்கை வாழ் மக்கள் உணர்ந்து விட்டார்கள். ஆனால் இலங்கை ஆட்சியாளர்கள் உணர்ந்தார்களா? என்பது இன்னும் வெறும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

அரசியல் இராஜதந்திர உறவுகளையும் இந்தியாவிடம் இருந்து வெகுவாகத் துண்டிப்பதே அதன் நெடுநாளைய அரசியல் திட்டம். அந்த திட்டத்துக்குள் இலங்கை ஆட்சியாளர்கள் தெரிந்தோ தெரியாமலோ சீனாவால் உள்வாங்கப்பட்டு விட்டார்கள்.


இலங்கையும் சீனாவும் ஒத்துப் போவதற்கு காரணம் பௌத்த மதமாகவும் இருக்கலாம். இலங்கை ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தை அதன் அடி வேர் வரை சென்று ஊடுருவி பற்றிப் பிடிப்பதுபோல் சீனா பௌத்தத்தை பற்றிப் பிடிப்பது கிடையாது.

அங்கு அது பெயரளவில் தான் மதமாக இருக்கின்றது. மதத்தை தவிர வேறு எதிலும் ஒத்துப்போகக் கூடிய சாத்தியப்பாடுகள் இலங்கைக்கும் சீனாவுக்கும் கடுகளவும் கிடையாது.

அதுமட்டுமல்லாமல் இலங்கை வாழ் ஈழத்தமிழரின் தொப்புள் கொடி உறவாகத் தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருப்பதால் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் நெருங்கிய தொடர்புகள் பரந்து விரிந்து கிடக்கின்றது.

ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி செய்யும் இந்தியாவை விட்டு ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்ட சீனாவிடம் சரணாகதி உறவை வைத்ததாலேயே இன்று இலங்கை பொருளாதார ரீதியாக சரிவைச் சந்தித்து வருகின்றது.

மீள முடியாத இந்த பொருளாதாரச் சரிவில் இருந்து இலங்கை மீண்டெழ வேண்டும் என்றால் சீனாவை விட்டு விலகி இலங்கை இந்தியாவின் பொருளாதாரச் சிந்தனைப் பாதையில் நெருங்கிச் செல்வதே சிறந்த பொருளாதார அரசியல் உத்தியாகும். ஏனென்றால் இந்த கொரோனா இடர் காலத்திலும் இந்தியாவின் பொருளாதாரம் சரிவை நோக்கிப் பயணிக்கவேயில்லை.



**இலங்கையும் சீனாவும் ஒத்துப் போவதற்கு காரணம் பௌத்த மதமாகவும் இருக்கலாம். இலங்கை ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தை அதன் அடி வேர் வரை சென்று ஊடுருவி பற்றிப் பிடிப்பதுபோல் சீனா பௌத்தத்தை பற்றிப் பிடிப்பது கிடையாது. மதத்தை தவிர வேறு எதிலும் ஒத்துப்போகக் கூடிய சாத்தியப்பாடுகள் இலங்கைக்கும் சீனாவுக்கும் கடுகளவும் கிடையாது.**

ஆதியில் இருந்து இன்று வரை சீனா ஒரு ஆக்கிரமிப்பு மனப்பான்மை கொண்ட நாடாகவே இருந்து வருகின்றது. சர்வதேச அரசியலில் அது எல்லா நாடுகளாலும் காலம் காலமாய் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

பல நயவஞ்சகமான சூழ்ச்சித் திட்டங்களால் எதிர்காலத்தில் ஆசியாவில் சீனப் பேரரசை நிறுவுவதே அதன் ஆட்சியாளர்களின் உள் நோக்கமாகும்.

அதில் ஒன்றுதான் தன்னைச் சுற்றியிருக்கும் சிறிய நாடுகளை சிறிய பெரிய கடன் பொறிக்குள் தள்ளி விட்டு தன் இலக்கை நோக்கி அது மௌனமாய் பயணிக்கின்றது.

ஆசியாவில் இந்தியாவை வளர விடக் கூடாது என்பதில் சீனா மிகவும் தெளிவாக இருக்கின்றது. இந்தியாவை சுற்றியிருக்கும் நாடுகளையும் அதன் பிராந்திய

ஆனால் இந்தியா பெரும்பான்மை இந்து மக்களைக் கொண்ட இந்து நாடாக இருந்தாலும் அது பௌத்த மதத்தின் சிந்தனைகளையும் போதனைகளையும் மிக சிரத்தையுடன் கடைப்பிடிக்கின்றது.

அதன் அடிப்படை அரசியல் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்டு ஆன்மிக ரீதியாக கட்டியெழுப்பப் பட்டாலும் அது அயல் நாட்டின் மண்ணின் மீது சீனாவைப்போல் ஆக்கிரமிப்பு குணம் அற்றதாகவே இருக்கின்றது.


கூப்பிட்டால் கேட்கும் தூரத்தில் இருக்கும் இந்தியாவின் கலாசாரமே இலங்கையில் இன ரீதியாக, மத ரீதியாக, அரசியல் ரீதியாக, வர்த்தக ரீதியாக எங்கும் பரவிக் காணப்படுகின்றது.

இலங்கையின் நிலப்பரப்பை சீனாவிடம் இருந்து காப்பாற்றவும் அதன் கடன் பொறிக்குள் மேலும் மேலும் சிக்காமல் தவிர்ப்பதற்கும் இந்தியாவின் நிரந்தர முரண்பாட்டுக்கு இலங்கை இரையாகாமல் இருப்பதற்கும் இந்தியாவின் இதயத்திற்குள் குடியேறுவதைத் தவிர வேறு மார்க்கம் இலங்கை ஆட்சியாளர்களுக்கு கனவிலும் கிட்டாது என்பதே இன்றைய வெளியுறவுக் கொள்கையின் கள யதார்த்தமாகும்.

**சாம்-ரமேஷ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாஜ்மகால்



இடைப்பட்ட காலத்தில் அரசியல் காரணங்களுக்காக அக்பரா பேஹம், பதேபுரி பேஹம் ஆகிய இரண்டு பெண்களை ஷாஜகான் மணந்திருந்தாலும் அவர்கள் மீது அவருக்கு அத்தனை ஆர்வம் இல்லை. சில நாடுகளோடு யுத்தங்களை தவிர்ப்பதற்காக இது போன்ற திருமணங்கள் அந்தக் காலத்தில் நடப்பதுண்டு.

1607 ஆம் ஆண்டு நிச்சயம் செய்யப்பட்ட அவர்களது திருமணம் 1612 ஆம் ஆண்டு மே 10 ஆம் திகதி தான் நடைபெறுகிறது. திருமணம் நடைபெற்ற உடன் ஷாஜகான் தனது அன்பு மனைவியின் பெயரை மும்தாஜ் மஹால் என மாற்றம் செய்கிறார்.

'மும்தாஜ் மஹால்' என்பதற்கு 'அரண்மனையின் ஆபரணம்' என்று பொருள்.

இருவருக்கும் இடையேயான காதல் கவித்துவமானது. ஷாஜகான் எங்கு சென்றாலும் மும்தாஜ் இல்லாமல் செல்வதே இல்லை. தனது படைகளை பார்வையிடச் செல்லும் போதும் கூட மும்தாஜுடன் தான் செல்வது வழக்கம்.

இருவருக்கும் மொத்தம் 14 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அதில் தாராஷிகா, ஷூசா, அவுரங்கசீப், மூரத் ஆகிய நான்கு ஆண் குழந்தைகளும் ஜஹன்னாரா, ரோஷானாரா, கவுஷானாரா ஆகிய மூன்று பெண் குழந்தைகளும் மட்டுமே நீண்ட காலம் வாழ்ந்தவர்கள். மற்றக் குழந்தைகள் இளம் வயதிலேயே இறந்து போயினர்.

## அன்பின் விளையாட்டு

ஷாஜகான் வைரக் கற்கள் நகைகளின் பிரியர். ஒரு முறை வெளிநாட்டிலிருந்து விலை உயர்ந்த வைரக் கற்கள் தன்னிடம் வந்திருப்பதாகக் கூறி மும்தாஜ், சில கற்களை மிகுந்த பாதுகாப்புடன் ஷாஜஹான் பார்வைக்கு அனுப்பி வைக்கிறாள்.

ஷாஜஹான் வைரங்களின் தரத்தை சோதிப்பதிலும், மதிப்பிடுதலிலும் நிபுணர் என்றாலும் மும்தாஜ் அனுப்பிய கற்களை அவள் மீது கொண்ட காதலால் அவர் சரிபார்க்காமலேயே பத்திரமாக தனது கருவூலத்தில் வைத்து விட்டார்.

இரண்டொரு நாட்கள் சென்ற பிறகு அவற்றின் மீது எறும்புகள் மொய்ப்பதை பார்த்த பிறகுதான் அவருக்கு புரிந்தது, இனிப்பு உருண்டைகளை வைரம் போல் மெருகேற்றி மும்தாஜ் அவரோடு விளையாடும் நோக்கில் அனுப்பி இருக்கிறாள் என்பது. இருவருக்கும் இடையேயான அன்பின் மிகுதியில் இப்படியான விளையாட்டுக்கள் அவ்வப்போது நடந்திருக்கின்ழன.

1631 ஆம் ஆண்டு ஜூன் 17 ஆம் திகதி 14 ஆவது குழந்தையான கவுஷானாரா பிரசவத்தின் போதுதான் மும்தாஜ் இறந்து போனார். தட்சிணப் பிரதேசத்தில் அரசியல் மாற்றங்கள் குறித்து விவாதிக்கச் சென்ற ஷாஜகான் மும்தாஜின் உடல் மிகவும் மோசமான நிலையில் உள்ள தகவல் கிடைத்த உடன் நாடு திரும்புகிறார்.

மும்தாஜ் தனது கடைசி நிமிடங்களில் வைத்த கோரிக்கை தான் தாஜ்மஹால். மும்தாஜ் இறந்த சில நாட்களிலேயே ஷாஜகானின் உடல் கூன் விழுந்து தலை முழுக்க நரைத்து விட்டதாம். அந்த அளவு அவர் மும்தாஜை நேசித்திருக்கிறார்.

தாஜ்மஹாலை நிர்மாணிக்க ஷாஜகான் தேர்வு செய்த இடம் ஆக்ராவிலுள்ள யமுனை ஆற்றங்கரையில் இருந்த ஒரு நந்தவனம்.

அது ஷாஜகானின் நண்பர் ராஜபுத்திர மன்னர் ஜெய்சிங்கிற்கு சொந்தமானது. நண்பரின் மனம் சங்கடப்படக் கூடாது என்பதற்காக மூன்று அரண்மனைகளை அவருக்கு பரிசாகக் கொடுத்து அந்த நந்தவனத்தைப் பெற்றுக் கொண்டார். (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2462

### சுகிர்தன்




### வானதி

சோகமாய் இருக்கும் போது கூட சிரித்துக் கொண்டே இரு



உன் சிரிப்புக்காகவே உன்னை ஒருவர் நேசிக்கக் கூடும்

### மன்மதன்


காசு விக்கிற விலைக்கு நம்மளும் இந்த மாதிரி பாத்திரம் வாங்கி வைச்சுக்கனும் போல



அப்பத்தான் குடும்பத்தை ஓட்ட முடியும்

### சுபாசினி

இறந்த காலமாக மாற்றுக
"மாடு புல்லை மேய்கிறது"




விடை- மாடு இறந்து விட்டது

### கமல்ராஜி

கொரோனா 3 அலை எப்போ வருவ




உங்க பிடரிக்குப் பின்னால் தான் நிக்குறேன்
நீங்க போனதும் வந்துடுவேன்

### ஜனுசிகா

என்னடா நடக்குது நாட்டில ஓ மை காட்-னு
வைரஸா புதுசா வந்திருக்காம்ல



யோவ் அது ஒமிக்ரோன் (Omicron)னாமாம்
டேய் முடியலடா இப்பதான்டா வீட்டை விட்டு
வெளியில வந்தன்டா மறுபடியும் ஊரடங்கா...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

268

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பழங்கள், விதைகள் அதிகம் உண்டு ஆரோக்கியம் பெறுவோம்

மனிதகுல விருத்தியின் ஆரம்ப காலத்திலே பழங்கள் மனிதனின் பிரதான உணவாக இருந்து வந்தது. பழங்கள் உண்பது ஆரோக்கியத்துக்கு நல்லது என்பது அனைவரும் அறிந்ததே. இந்தப் பழங்களின் மகிமையை அறிந்ததாலேயே முருகக்கடவுள்கூட பழம் சம்பந்தமான ஒரு பிரச்சினை காரணமாக கோபங்கொண்டு பழனிமலை வரை போனதாக சொல்லப்படுகிறது. இயற்கையன்னை எமக்களித்துள்ள ஏராளமான கொடைகளில் ஒரு முக்கிய இடத்தைப் பிடிப்பது விதம்விதமான சுவைகளையும் நிறங்களையும் கொண்ட பழங்கள் ஆகும்.

பழங்கள் நீரிழிவு உள்ளவர்களுக்கு நல்லதல்ல என்று கருதப்பட்ட காலம் நன்றாக இருந்தது. ஆனால் பழங்களை தினமும் உண்டு வந்தால் வகை 2 நீரிழிவு எனப்படும் நீரிழிவு நோய் வருவதற்கான ஆபத்து குறைகிறது என்று ஆராய்ச்சிகள் உறுதி செய்கின்றன.

சுமார் இரண்டு இலட்சம் பேரின் உணவுப் பழக்கம் மற்றும் உடல் ஆரோக்கியம் சம்பந்தமான 25 வருட தரவுகளை ஆராய்ந்து பார்த்ததில் இந்த முடிவு தெரிய வந்துள்ளது. அதே நேரம் பழச்சாறு குடிக்கும் வழக்கம் இருப்பவர்களுக்கு வகை 2 வருவதற்கான ஆபத்து அதிகரிக்கிறது என ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். எனவே பழங்களை பழச்சாறாக்கி உண்பதிலும் பார்க்க பழங்களாக உண்பது சிறந்தது எனக் கருதப்படுகிறது.


பழங்கள் ஒவ்வொன்றுக்கும் பற்பல சிறப்பியல்புகள் இருக்கின்றன. ஆனால் மருத்துவச் சிறப்பியல்புகள் அனைத்தையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட ஒரு மருத்துவப் பழமாக ஜம்புப்பழமே விளங்குகின்றது.

சுவைமிக்க இந்தப்பழம் கலோரிப் பெறுமானம் குறைந்தது. நிறை அதிகரிப்பை ஏற்படுத்தமாட்டாது. நீரிழிவு நோயாளரில்கூட குருதி வெல்ல அளவை அதிகரிக்கமாட்டாது. அதிகளவு நீர்த்தன்மையும் நார்த்தன்மையையும் கொண்டது.

சத்துக்கள் நிறைந்தவை. பசியைப் போக்கும். குடிப்பதற்கான இயற்கையான ஆரோக்கிய பானம் தயாரிப்பதற்கு இது ஒரு சிறந்த பழமாகும்.









சிறுவர்களும் சுகதேகிகளும் சகல விதமான நோயாளர்களும் உண்பதற்கு ஏற்ற ஒரு கனியாக இது விளங்குகிறது. அத்துடன் இது குருதியில் கொலஸ்ரோலின் அளவைக் குறைப்பதற்கு உதவுவதாகவும் நம்பப்படுகிறது.

மாம்பழங்கள் போன்ற இனிப்புச் சுவை கூடிய பழங்களை செம்பழ நிலையில் உண்பது சிறந்தது. அத்துடன் மாம்பழத்தைத் தோலுடன் உண்பதே நல்லது என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் தோலில்தான் அதிகளவு விற்றமின்சி காணப்படுகிறது.மேலும் கல்சியம், பொட்டாசியம், சோடியம் மற்றும் பொஸ்பரசு இதில் அதிகளவு உள்ளன.

வாழைப்பழமானது எக்காலத்திலும் கிடைக்கக்கூடிய முக்கனி. இது எமது பிரதேசத்தில் நன்கு விளையக்கூடிய மலிவான, சுவையான பழமாகும். உண்ணக் கூடியதாகவும் இருக்கின்றது. இதில் அடங்கியுள்ள சத்துக்கள் இது ஏனைய பழங்களுக்குச் சற்றும் சளைத்ததல்ல என்பதற்கு சான்று பகர்கின்றது. இரும்புச்சத்து அதிகமுள்ள மாதுளை இரத்தத்தின் அளவை அதிகரிக்க உதவுகிறது. அத்துடன் மாதுளம் பழங்களிலே பல எண்ணற்ற மருத்துவக் குணங்கள் இருப்பது ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டு வருகின்றன.

விதைகள், கொட்டைகள் என்பனவும் உடலில் பல அனுகூலமான விளைவுகளை ஏற்படுத்துவது அறியப்பட்டு வருகிறது. எவ்வளவுக்கெவ்வளவு கொட்டைகளை சாப்பிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிககாலம் வாழலாம் என்று நியூ இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகிறது.

அமெரிக்காவில் 30 ஆண்டு கால கட்டத்தில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் இந்த முடிவுகள் வந்துள்ளன. தினமும் ஒருகையளவு கொட்டைகளை சாப்பிடுவதால் எந்த ஒரு காரணத்தாலும் ஏற்படும் இறப்பதை 20 சதவீதம் என்ற அளவில் குறைக்கிறது என்று இந்த ஆய்வு கூறுகிறது.

கச்சான், கடலை, கசுக்கொட்டை மாதுளம்விதை, பாதாம் பருப்பு, கௌப்பி, பயறு போன்றவை உடல் ஆரோக்கியத்தைப் பேண உறுதுணையாக இருக்கின்றன. பழங்கள் மிக வேகமாக சமிபாடடையக் கூடியவையாதலினால் இவற்றைத் தனியாக உண்பது நல்லது. பொதுவாக இரவில் ஏனைய உணவுகளைத் தவிர்த்து பழங்களை மட்டும் உட்கொள்வது சாலச்சிறந்தது.

கலப்படமற்ற இயற்கையின் இனிய வரங்களான பழங்கள், விதைகள் என்பவற்றை அதிகம் உண்டு ஆரோக்கியம் பெறுவோம். மேலைத்தேய நாடுகளில் இயற்கையான பொருட்களிற்கு மதிப்பு அதிகம்.

அவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொள்வது கடினமாக இருந்தும் அதிகவிலை கொடுத்து இயற்கையான உணவுகளை வாங்க எத்தனை முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் எம்மைச் சுற்றி மலிவான, இயற்கையான பொருட்கள் எவ்வளவு இருந்தும் அதிக விலை கொடுத்து பொதி செய்யப்பட்ட பொருட்களை வாங்க ஆசைப்படுகின்றோம்.

ஒரு பொருளைப் பேணியிலோ அல்லது போத்தலிலோ பொதி செய்ய முன்பு அது பலவிதமான வெப்பநிலை மாற்றங்களுக்கும் உலர்த்துதல்களுக்கும் உட்படுத்தப்படுகின்றன. இதன்போது அதன் இயற்கையான மூலக்கூறுகளில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் இவை பழுது படாமல் இருப்பதற்காக இவற்றிற்குப் பல்வேறுபட்ட இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுகின்றன. இவை ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. எனவே இயற்கை அன்னையான உடன் உணவுகளை உண்பதில் ஆர்வத்தை வளர்த்து ஆரோக்கியம் பெறுவோம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org